ஸ்ரீ

ஸ்ரீ - மத்வராமுநயேநம.

ஸர்வம்விஷ்ணுமயமஜகத்

கோபாலகிருஷ்ணதாசர்

அருளிச்செய்த.

எம்பிரான்சதகம்

மூலமும்உரையும்

சிலவைஷ்ணவர்களும்-

உ-நாராயணசாமி முதலியாருங் கேட்டுக்கொண்டபடி

சென்னைகவர்ன்மெண்டுநார்மெல்ஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

சோமளபுரம்.

இராசகோபால்பிள்ளையவர்களால்

பரிசோதித்து

இஃது

இ-தெய்வசகாயமுதலியார்

ரவர்களால்.

தமது.

அருணோதயஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

(*)

இரக்தாட்சி - வரு - மாசிமீ.

1864

REGISTERED-OF COPY RIGHT.

இந்த கம்பிரான்சதகமூலமும்உரையும் அச்சிற்பதிப்பித்த-கி-தேவ சகாயமுதலியாரவர்களது-அனுமதியன்றி அச்சிற்பதிப்பிக்கின்றவர்களும் இதைபதிப்பித்தஅச்சுக்கூடத்திலிவர்களும் - நூஅசஅவு ஜனவரிமீ உடுவையில் பதிப்பிக்கப்பட்ட கனம்பொருந்திய கவர்ன்மெண்டு செட்டென்னும் பத்திரிக்கையில்-நூஅசஎஉத்து-உ-வது தூக்டிற்கூறியபடி ஷையாரால்வழக்கிடப்படும்-நஷ்டத்துக்கு உத்தரவாதிகளாகக்கடவரென்றியாவருமறிவீர்களாக.

இப்புத்தகம் வேண்டியவர்கள் -சென்னப்பட்டணம் புரசைபாக்கத்தைச்சேர்ந்த நாராயணம்பாளையத்தில் (கூஉ) வது நெம்பர்தெருவு-மூதல் நெம்பருடைய வீட்டிலிருக்கும் அருணோதய அச்சுக்கூடத்திலிவ்விடத்தில் புத்தகம்-க-இ-விலை-கூ ஒ-லாக வாங்கிக் கொள்ளலாம்.

பெயர்கள்	தொகை
ஆறுமுகமுதலியார்-சி	ச
ஆதிநாராயணசாமிமுதலியார்-த	க
இராமசாமிநாயுடு-வி	க
இராமசாமிநாயக்கர்-சி	எ
இராமசாமிமுதலியார்-வ-ப	க
இராமசாமிநாயக்கர்-கோ	க
இராஜகோபாலநாயக்கர்-பி	க
இராமசாமிநாயக்கர்-சி-உபாத்தியாயர்	க
எதிராசுலுநாயுடு-டி	க
எதிராசுலுநாயுடு-டி-ன	க
எதிராசுலுநாயக்கர்-ப	க
கன்னியப்பமுதலி-தெ	க
கந்தசாமிமுதலியார்-பு	க
கிருஷ்ணப்பமுதலி-சூ	க
கிருஷ்ணசாமிநாயுடு-பு	க
கிருஷ்ணசாமிஉபாத்தியாயர்-ஆ-மூ	க
குப்பாசாரி-தி	க
குள்ளப்பநாயக்கர்-சா	க
கேசவுலுநாயுடு-கொ	க
கேசவராயபிள்ளை-உ-பூ	க
கேசவுலுநாயுடு-டி	க
கோவிந்தராசுலுநாயக்கர்-தி	க
கோபாலசாமிநாயக்கர்-பு	க
கோவிந்துராசுமுதலி-வே	க
கோவிந்துசாமிநாயுடு-பு	க
சங்காலிங்கம்முதலி-வே	க
பாபதிமுதலி-செ	க
சுப்பராயுலுநாயக்கர்-ஐ	க
சேஷாசலமுதலி-சி	க
தாண்டவராயநாயக்கர்-ப	க
திருவேங்கடபிள்ளை-தி	க
நம்மாள்வார்நாயக்கர்-பி	க
நாராயணராசு-உபாத்தியாயர்	க

பெயர்கள்	தொகை
நாதமுனிநாயக்கர்-து	உ
நாதமுனிநாயக்கர்-நா	க
நாராயணசாமிநாயுடு-சி	க
நாராயணசாமிநாயுடு-சொ	க
நாச்சியப்பமுதலி-அ	க
பார்த்தசாரதிநாயுடு-நி	ம
பார்த்தசாரதிநாயக்கர்	க
பெருமாள்முதலி-பு	க
பெருமாள்பிள்ளை-பு	க
பொன்னப்பாசாரி-சூ	க
பொன்னுசாமிநாயுடு-பே-சே	க
பொன்னரங்கமுதலி-ம	க
மக்கபதிநாயக்கர்-நீ-லி	க
மாலைமணிமுதலி-இ	க
முனிசாமிமுதலியார்-பெ	டு
முனியப்பமுதலியார்-சூ	க
முருகேசன்-பம்	க
லட்சுமணசாமிமுதலி-லி-சி	க
வரதயநாயக்கர்-கோ	க
வரதப்படமுதலி-செ	க
வீராசாமிநாயக்கர்-சி	க
வீரபத்திரமுதலி-பு	க
வைத்தியாசாரி-சூ	க
வெங்கடாசலநாயக்கர்-சி	க
வெங்கடாசலுநாயுடு-எ-ய	க
வேணுகோபாலமுதலி-நேமம்	உ





நன்முக குருவாழ்க குருவேதுணை

ஸ்ரீமதேராமாநுஜாயநம.

எம்பிரான்சதக மூலமும்- உரையும்.

காப்பு.

என்றுந் திருமாற்கே யாளாவே னெம் பெருமான்
என்று மெனக்கே பிராளுவான் என்றும்
பிறவாத பேராளன் பேராயிரமும்
மறவாதுவாழ்த்துக வென் வாய்.

(இ-ள்)எந்நாளிலும் ஸ்ரீயப்பதிக்கே தாசனுவேன் அந்த எம்பெருமான் எந்நாளுந் தனது நிர்ஹேதுக கடாட்சத்தால், என்னைத் தாசனுக்கிக் கொள்வதற்கே பிராளுக இருப்பான், உச்சரித்தவர்கள் எப்போதும் பிறவாமைக்குக் காரணமாகிய திருநாமங்களையுடைய அம்முதற் கடவுளினது சகஸ்ரநாமங்களையும் என்வாயானது மறவாமல் வாழ்த்தக்கடவது என்ற வாறு.

பாயிரம்,

பிடிபடாமறைபிடித்துவேதமார்க்கப்-பிரதிட்டாபனு சாரியருபதேசத்தை அடைவுடனே யெழுபத்துநாலவர்க்கீந்தே- அவர்கள் சிங்காதனக்குருக்களாக வைத்தோர், உடையவரெம் பெருமானுர் பாஷியகாரர்- உயர்பூதூர் வள்ளலார் நினைந்தோர்க்கெல்லாம், இடரறுக்கு மெதிராச விட்பிரதுங்கர்- எங்கள் ராமாநுசர் தாளிறைஞ்சு வோமே.

(இ-ள்) சங்கரர், பாஸ்கரர், யாதவர், முதலிய குதிர்ஷ்டிகளுக்குத் தோ
ருமல் நின்ற வேதார்த்தத்தைக் கண்டுபிடித்து * பரமவைதிக மார்க்கத்
தை நிலைக்கச் செய்து வேதமார்க்கப் பிரதிஷ்டாபநாசாரியனென்றும், ஆசா
ரியர் பக்கல் கேட்டருளிய திருமந்திரத்தை எழுபத்து நான்கு தத்துவ தரி
சர்களுக்கு உபதேசமுறையாக அருளிச் செய்து, உலகத்தாரது உஜ்ஜீவ
நார்த்தமாக அவர்களைக் குருக்களாக வைத்துக் குருராயனென்றும், சரணா
கதி செய்தவர்களுக்கு நித்திய விபூதியையும் லீலாவிபூதியையும் தந்தருளு
ம் காரணத்தைப்பற்றி நம்பெருமாளால் உடையவனென்றும், திருக்கோட்
டி நம்பிகளால் எம்பெருமானனென்றும், சரசுவதிதேவியால் ஸ்ரீபாஷ்யகார
னென்றும், முற்றத்துறந்தமுனிவர்களுக்குள் சிறந்தவராகையால், தியானிக்
கும் அடியார்களுக்கெல்லாம்பிறவித்துன்பத்தை ஒழிக்க நின்ற எதிராசனென்
றும், சகாயக்கியோப வீதமுதலிய பிராமண வொழுக்கங்களுள்ளது தொழு
கிய படியால் விப்பிரதிஷ்டனென்றும், தேப்பெருமாளால் இராமாநுசனென்
றும், திருநாமங்களைப் பெற்ற எல்லாத்தலங்களிலும் முயர்ந்த எங்களுடைய
ஆசாரியர் வள்ளலாருடைய திருவடிகளை இந்நூல் இனிது முடியும் பொருட்டு
வணங்குவாம்-எ-று. (க)

* பரமவைதிகமார்க்கமாவது பகவந் நாராயணனுடைய சரம பூதரான ஸ்ரீவேதவி
யாசபகவான் உலகர்உய்யும்படி, சாங்கியயோகபௌத்தஜைந தார்க்கிகபாசு
பதாதி மதங்களைக் கண்டித்துத் தத்துவ ஹித புருஷார்த்த நிலைகளை விளக்குஞ்
சாரீரக மென்கிற பிரமமீமாஞ்சையை அருளிச்செய்தனர், அது பிரமசூத்
திரமென்றும், வியாசசூத்திரமென்றும் வழங்கப் படும், அந்தப்பிரமமீமா
ஞ்சைக்கு வியாசசீடரான போதாயனர் அவர்பக்கல் கேட்ட சிறந்த பொ
ருள்களைப் பின்புள்ளாரும் அறிந்துய்ய, இலட்சத் திருபத்தையாயிரக் கிரந்
தப்பரப்புள்ள போதாயன விருத்தி யென்னும் ஒருநூல் செய்தருளினர்,
அவர்சீடராகிய திரமிடாசாரிய மகாமுனிவர் அந்த விருத்திக் கிரந்தத்துக்கு
ச்சங்கிரகமாகஒருபாஷியஞ் செய்தருளினர், அதற்குத் திரமிடபாஷியமெ
ன்று பேர்வழங்கும், அப்பாஷியத்தை அவலம்பித்து டங்க, குஹதேவ, பிர்
மதந்திகள், தனித் தனி சிலபாஷ்யங்களைச் செய் தருளினர்கள், அவைகளை
அவலம்பித்து வாமன முனிமுகை யருளிச்செய்தனர், அவைகள் யாவற்
றையும் அவலம்பித்து ஸ்ரீமந் நாதமுனிகள் ஞாயதத்துவ மென்னும் நூலை
யும், ஸ்ரீ ஆளவந்தார் சித்து திரயமென்னும் நூலையும் அருளிச்செய்தனர்கள்,
அந்நூல்களெல்லாம் வேதபுருஷனுடைய கருத்துக் கிணங்கவிசிஷ்டாத்து
வித பரமாகவே அமைந்திருந்த, உண்மையுணராத சிலகுதிர்ஷ்டிகள் அவற்றி
ற்கு விபரீதமாக நவீனமதங்களைக் கற்பித்தனர்கள், இவை பெருகுவதைக்

கண்டு ஸ்ரீ சருவேசுரனுடைய இருதய சுரூபரும்" சென்னிற்குடையா மிருந்தாற்சிங்காதனமாம்- நின்னுன்மரவடியா நீள்கடலுள்- என்றும்- பூணையாமணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்- அணையாத்திரு மாற்கரவு,, என்றபடிபிராட்டிபிரிந்த தசையிலும் தாம்பிரியாதே சருவதேச சருவகால சருவாவத்தைகளிலும் ஸ்ரீ சர்வேசுரனைத் தொடர்ந்திருப்பவருமென்னும் ஸ்ரீ அனந்தாழ்வானுடைய திருவவதார மாகிய, ஸ்ரீ ராமானுஜர் ஸ்ரீ போதாயனதிரமிடங்க, குஹதேவ, பிரமநந்தி, வாமன, நாதயாமுனி, பூர்வாசாரியர்கள், அருளிச்செயத விசிஷ்டாத்துவித கிரந்தங்களைக் கடாட்சித்து ஸ்ரீ பாஷிய கீதாபாஷிய வேதார்த்தசங்கிரக முதலிய கிரந்தங்களைச்செய்து சங்கர, பாஸ்கர, யாதவாதியர் செய்த நூல்களைக்கண்டித்து நிலைக்கச்செய்தமார்க்கமாம்.

கிம்புருடர்கருடர்காந்தருவசித்தர்-கின்னரர்வித்தியாதரர்சங்கீதம்பாடத், தும்புருநாரதர் சனகாதிய சண்டோனன்- சுரர்முனிவரிருடியர்கள் பல்லும் போற்ற, அம்புயனுன்மறையோத வீற்றிருக்கும்-அச்சுதனேயுனக்கென்றன் புன்சொல்லாலே, எம்பிரான் சதகமெனவிருத்தநூறும்-இசைப்பதற்குமுன்னிற்பாயெம்பிரானே.

(இ-ள்) கிம்புருடர், கருடர், காந்தருவர், சித்தர், கின்னரர்வித்தியாதரர், இவர்களனேவோரும்நின்னுடன்னுடையகீர்த்திப்பாட்டைக்கேம்பாடவும், தும்புரு, நாரதர், ஜனகர், முதலியபிரமரிஷிகள், ருத்திரன், மௌனசிலர்கள், இந்திரியங்களைவென்றவர்கள், இவர்களெல்லோரும்துதித்துவணங்கவும், மூலதாமரையிற்பிறந்தபிரமன்நான்குவேதங்களால்துதிசெய்துவணங்கவும், ஆதிசேஷன் மேல் வீற்றிருக்கின்ற நித்தியமாகியமுதற்கடவுளேஉனக்குஎன்னுடைய அற்பச்சொற்களைக்கொண்டு எம்பிரான் சதகமெனநூறு விருத்தச்செய்புட்களைப்பாடுதற்குமுன்னின்றுகாப்பாய் எம்பிரானே-எ-று. (உ)

ஆழ்வார்கள்பன்னிருவர்பாடல் போற்றும்-அரிபத்தன்கோபால கிருஷ்ணன்பால், கேள்வியாற்றனதறிவின்மிகுதியாலும்- கிருபைசூர்குருகிருபாகடாட்சத்தாலும், தாழ்விலாவெம்பிரான்சதகந்தன்னைச்-சாற்றினுல்போற்றியன்பரேத்தும்வண்ணம், கேள்வியாலது தினமுங்கீர்த்திப்பார்கள்- இளர்வின்வைகுந்தத்துளராய்வாழ்வார்.

(இ-ள்) பொய்கையாழ்வார்பூதத்தாழ்வார்பேயாழ்வார்திருமழிசையாழ்வார் நம்மாழ்வார்குலசேகராழ்வார்பெரியாழ்வார்திருப்பாணாழ்வார்தொண்டரடிப்பொடியாழ்வார் திருமங்கையாழ்வார்மதுரகவியாழ்வார்சூடிக்கொடு

த்தநாச்சியார்ஆகிய பன்னிரண்டாழ்வார்களதுஅருளிச்செயல்களைஅனுசி
னமுந்துதிக்கும்ஸ்ரீ ஹரிதாசராகிய கோபாலகிருஷ்ணனென்னுந் திருநாம
த்தையுடையவர் அன்பிலுலும் பரமவைதிகமார்க்கத்தார். பாற்கேட்டறிந்த
மெய்ஞ்ஞானக்கேள்வியிலுலும் மிகுந்த உண்மைபரிவிலுலும் கிருபைநிறை
ந்தசதாசாரிய கடாட்சத்திலுலும், மெய்யடியார்கள் இதைக்கொண்டு திரு
மாலைத் துதித்துவணங்கும்படி இலக்கணக்குற்றமில்லாதஎம்பிரான் சதகமெ
ன்னும் பிரபந்தத்தைச்சொல்லியருளினர், இந்தப்பிரபந்தத்தின் பொருளை
யறிந்துஎந்நாளும் இந்நூற்பாடல்களால் சருவேசுரனைத்துதிப்பவர்கள்நி
ரதிசயானந்தபரமபதத்தில்நித்தியமாய்வாழ்வார்கள்-எ-று, (சு)

பாயிரம்-மூற்றும்.

நூல்.

திருமாதுவிற்றிருக்குங்கமலமார்பா-திகிரிசங்கந்தரித்தருளுஞ் செய்யகை
யா, சருமாணிக்கக்கிரிபோலிறத்தமெய்யா-கதிரவிமதியிரண்டுங்கண்ணுங்க
ண்ணு, அருமாமறைப்பொருளாம்வாசுதேவா- அனைத்துலகும்படைத்தளித்
திட்டழிக்குமையா, இருபாதமலர் போற்றுமெய்யர் நெஞ்சில்- இருத்திநா
ராயணனேயெம்பிரானே. *

(இ-ள்-)பெரியபிராட்டியார்எழுந்தருளியிருக்குந் தாமரசபுஷ்பமாகிய
திருமார்பையுடையவனே சுதரிசனத்தையும்பாஞ்சசன்னியத்தையுந்தாங்கி
யருளுஞ்சிவந்தகரங்களையுடையவனேகருமாணிக்கமலைபோன்றநிறத்தையு
டைய திருமேனியானேகிரணங்கள்நிறைந்தசூரியனையும்-சந்திரனையும் -இர
ண்டுநேத்திரங்களாகவுடையகண்ணனே அரியவேதப்பொருளாகிய ஆதிப
வனே சகலாண்டங்களையும் பிரமனுக்குள்அந்தரியாமியா யிருந்து சிருட்டி
த்துஸ்ரீவிஷ்ணுவாகஇரட்சித்துச்சிவனுக்குள் அந்தரியாமியாய் நின்று அழிக்
கும்ஐயனே நீயேமுதற்கடவுளென உண்மையறிந்து உன்னுடையஇரண்டுதி
ருவடித்தாமரைகளையும்வணங்கப்பெற்றமெய்யடியார் திருவுளத்தில்எழுந்த
ருளியிருக்கின்றஸ்ரீநாராயணனேஎம்முடையபெருமானே-எ-று. (க)

மாதவநீ திருமங்கைக் குபதேசித்த-மந்திரஞ்சேரபதிமெய்ச்சடகோபன்சி
ர், நாதமுனி யுடனுய்யக்கொண்டார்மிக்க- ஞானமணற்கானம்பியாளவந்தா
ர், நீதிபுனை பெரியநம்பியுலகம்போற்றும்- நிகரில்ராமாநுசனல்லுபதேசம்
பெற், றேதமறவெழுபத்தாறாலுபேருக்- கெதிராச னுரைக்கவைத்தாயெம்
பிரானே. *

(இ-ள்) ஸ்ரீயப்பதியே நீ பெரியபி ராட்டியாருக்கு உபதேசித்த திருமந்
ரத்தை அந்தப்பராசத்தியானவர் சேஷபதிக்கு அருளிச்செய்ய, அவர் உ
மைபுணர்த்தசடகோபருக்கு அருளிச்செய்ய, அவர் மிக்கசீர்த்தியுடைய த
தமுனிகளுக்கு அருளிச்செய்ய, அவர் உய்யக் கொண்டாருக்கு அருளிச்செ
ய்ய, அவர் மிகுந்த ஞானமுடையமணக்கால் நம்பிக்கு அருளிச்செய்ய, அவ
ளவந்தாருக்கு அருளிச்செய்ய, அவர் வேதவெழுக்கே ஆபரணமாகவுள்ள
ய பெரியநம்பிகளுக்கு அருளிச்செய்ய, அவரிடத்தில் மெய்ஞ்ஞானச் செ
ல்வர்கள் வணங்குகின்ற ஒப்பில்லாத இராமானுசாசாரியர் உபதேசம் பெ
று, ஓரான் வழியாக வந்த அந்தத்திருமந்திரத்தை, உலகத்தாருடைய பிற
பின் பிணியகலும்படி எழுபத்து நான்கு சிங்காதன குருராயர்களுக்கு உ
தேசித்தருளச்செய்தாய் எம்பிரானே-எ-று. (எ

பூதலத்திலுண்டானதலங்கடம்மில்-புண்ணியகோடித்தலமென்றுயர்ந்து பா
த்து, வேதநெறியாலாதிப்பிரமன்முனும்- மிக்கதிருக்கச்சியில்வந்திறங்கி
ற்றே, ஆதரவாயத்திகிரித்தலத்திலோமம்- அன்றவன்முன்பண்ண வந்தவோ
குண்டத், தேதமறவந்துதித்தேவரங்களீந்தாய்- எண்ணரியவருளாளா வெ
பிரானே.

(இ-ள்-) முதன்மைச்சிருட்டியாகியபிரமனும்பூமியின்கணுண்டாகிய பு
ண்ணியதலங்களிலே, இதுபுண்ணியகோடித்தலமென்றுஆராய்ந்து நிச்சயித்
மிகுந்தவளப்பமுடையதிருக்காஞ்சியில் வந்து சேர்ந்து வேதநெறிப்படி
ன்போடஅந்திகிரித்தலத்திலேயாகஞ்செய்ய, அந்தயாககுண்டத்தில்திரு
வதரித்து அப்பிரமனுக்கு வேண்டியவரங்களைத்தந்தருளினாய், அளவிடக்
டாதகருணையையுடையானேஎம்பிரானே.எ-று- (எ

உன்னுடையவுடன்மயமேபூமியெல்லாம்- உனதுசெவ்வாய்நீர் மயமேயுள்
மெல்லாம், மின்னியநின்கண்மய மேதேயுவெல்லாம்- வீறியநின் சுவாசம
மேகாற்றெல்லாம், நின்னினைவின்மயமேயாகாயமெல்லாம்- நின்மூர்த்திம
மூயிர்களுணர்வெல்லாம், என்னுடலோடுயிர் செய்கையெல்லாநீயே-
ரண்டுபண்ணியலிப்பதென்னேவெம்பிரானே

(இ-ள்-)பூமியெல்லாம்உன்னுடையதிருமேனியின்மயமேயாம், சமுத்தி
முதலியநீரெல்லாம் உனதுசெவ்வாயிலூறியநீர்மயமேயாம், சூரியன்முதலி
ஒளியுள்ளபொருள்களெல்லாம் விளங்காநின்ற உனதுதிருக்கண்களின்மய

ம், பிரசண்டமாருதமுதலியகாற்றெல்லாம்யாவரிலும் உயர்ந்தவுனதருவா
யமேயாம், ஆகாசமெல்லாம்உனதுநினைப்பின்மயமேயாம், எல்லாவுயிர்
ளும், அவற்றினதிவுமாகியஇவையெல்லாம்உனதுமூர்த்திமமுமேயாம், ஆகை
ல்என்னுடலும் உயிரும் செய்கையுமெல்லாம் உன்வசப்பட்டிருக்க; நல்வி
தீவினைகளென இரண்டுபண்ணி அவ்வினைகளைக்கொண்டுஎன்னை யலையசெ
வதுயாதுகாரணமோ எம்பிரானே.எ-று- (ச)

ருளாளாவேகவதிநதிஞ்சூச்சி- அத்திகிரிநாதா வேதாகமத்தின், பொருளா
ராயணனேவாசுதேவா- புண்ணியகோடிக்கிறைவா தேவராசா, மருளான
ரணியன்மார்புதிர்த்தநாணில்- வந்துதித்த நரசிங்கா வரதராசா, இருளானத
காமனின்மூள்போற்றி- யீடேறநினைவளிப்பாயெம்பிரானே. *

(இ-ள்-)அருளாளனே வேகவதியாறுசூழ்ந்த திருக்காஞ்சியில் அத்திகிரியின்
மலைமூந்தருளியசருவசுவாமியே இருக்குமுதலிய வேதங்களாலும் ஸ்ரீபா
சுரத்திரமுதலியவைதிகாகமங்களாலும் துணியப்படுகின்ற பொருளாகிய
ராயணனேவாசுதேவனேபுண்ணியகோடிவிதலத்துக்குத்தலைவனே பிரமா
தேவர்களுக்குஅரசனேதானேபிரமமென்றுமயங்கிநின்றஇரணி யன்குதித்
நாணினிடத்தேவந்துஅவதரித்தநரசிங்கனேவரதராசனே அஞ்ஞான விரு
ான துன்னைச்சேராமல் உன்னுடைய சுடரடிகளை வணங்கப் பெற்றுப்பி
விக்கடலினின்றும் நீங்கஉய்யும்படி நல்லதினைப்பை எனக்குக்கிருபைசெய்
ரம் எம்பிரானே.எ-று- (ஞ)

ண்ணியிடும்பணிபலவேபொன்னென்றேயாம்- பாண்டத்தின் பேர்பலவே
ணனென்றேயாம், வண்ணமுறுசுபலம்ப பாலொன்றேயாம்- வகையே
றுடல்பலவேசீவனொன்றும், நண்ணுமறுசமயங்கள்பெயர்வேறல்லால்-நா
நீ பொருவனே யவர்கடம்மை, எண்ணியேசெயுந்தொண்டர் பூசைக்கெல்
ாம்- இரங்கிவரந்தருகின்றாயெம்பிரானே. *

(இ-ள்-)செய்யப்படும் ஆபரணங்கள் பலவாயிருப்பினும் பொன்னென்
றேஅவற்றிற்குக்காரணமாகும், பாண்டங்களின் பேர்பலவாயிருப்பினும் மண்
னென்றேஅவற்றிற்குமுதற்கருவியாகும், அவைபோலவும், நானிநமனைமற்
பசுக்கள்பலவாயிருப்பினும் அவற்றினிடத்துண்டாகும்பால் நிறஞ்சுவை மு
லியவற்றில்ஒருதன்மையதாகயிருக்கும், தேவர், மக்கள், விலங்கு, பறவை, உள
வன, நீர்வாழ்வன, தாவரம்என்னும் எழுவகைப்பிறப்பில்உடல்கள் பலவாயி

ருப்பினும்அவற்றினுள்தங்கியசிவர்கள்பலரும்கியான முதலிய வற்றுல்ஒரு
தன்மைப்பட்டவர்களாகவேயிருப்பார்கள் அவை போலவும், இவ்வுலகினை
வைணவம், சௌரம், சைவம், கௌமாரம், காணபத்தியம், சாத்தேய மென்
றும், புத்தம், சமணம், பாட்டாசாரியம், சார்வாகம், சைவம் கௌமாமென்
றும், அவ்வாருகச்சொல்லப்பட்ட சமயப்பேர்கள் வேறேயல்லாமல், பரம
வைதிகமார்க்கக் கடவுளாகிய நீயொருவனே அந்தச்சமய தேவர்களுக்குள்
அந்தரியாமியா யெழுந்தருளியிருந்து, அவர்களுக்குப் பத்தியோடுதொண்
டர்கள்செய்யும்பூசைக்கெல்லாம் கருணைசுரந்து வேண்டிய தருந்தவரங்களை
த் தந்தருளுகின்றாய் எம்பிரானே.எ-று- (சு

கேசவநாராயணமாதவகோவிந்த- கிளர்விண்டுமதுசூதகேடிலாத, நேசஇரி
விக்கிரமனேவாமனசீர்- நிறைந்தருளுஞ் சீதரா விருடிகேசா, மாசிலெழில்
சோ பதுமநாபாவெங்கும் வளர் தாமோதரா வெனும் பேர்பன்னிரண்டி
ற்- கீசலுயெண்டிசையுள் புறம்பு கீழ்மேல்- இவையீராறிட த்துறைவா யெ
ம்பிரானே.

(இ-ள்-)கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், யாவரிலும்உயர்ந்து
விளங்குகின்றவிஷ்ணு, மதுசூதன், அடியார்களிடத்தில்நீங்காத அன்புடைய
திரிவிக்கிரமன், வாமனன், உண்மைப்புகழையுடைய எங்கும்நிறைந்த சீதர
ன், இருடிகேசன், ஹேய குணங்களில்லாமல் அநந்தகலியாண குணங்கள்
நிறைந்த பதுமநாபன், எக்காலங்களிலும் எவ்விடங்களிலும் எப்பொருள்
களிலும் இருக்கின்ற தாமோதரன் எண்ணும்பன்னிரண்டு திருநாமங்களுக்
குப் தலைவனாகி எட்டுத்திக்கு, அகம், புறம், கீழ், மேல், இப்பன்னிரண்டிடத்
தும் வசிப்பாய் எம்பிரானே-எ-று. (எ

சங்கரடணு வாசுதேவ முத்தி-தரும்பிரத்தி-யுமனுவநிருத்தாமெய்ச்சீர்த்தி,து
ங்கபுருடோத்தமனேயதோட்சசாவெஞ்-சுடர்நாரசிங்கவெழிலச்சுதாநீன், அ
ங்கசனார்த்தனவுபேத்திரனேயிக்க-அரிகிருஷ்ணவென்றுதிரிசந்திதோறும்,ல
ங்குமூள்ளபூசுரர்கள்சந்திபண்ண-இருந்திநாராயணனேயெம்பிரானே.

இ-ள்-எவ்விடங்களிலுமுள்ளபிராமணர்களெல்லோர் யாவரும்காலை, மா
லை உச்சியென்னும் திரிசந்தியா காலந்தோறும், சங்கரஷ்ணு, வாசுதேவ,
நிரேதாக கடாட்சத்தால் பரமபதத்தைத் தந்தருளுகின்றபிரத்தியுமனு, அநி
ருத்தா, உயர்ந்தமெய்ப்புகழையுடையபுருஷோத்தமா, அதோட்சசா, வெற்

மரனகிரணங்களேவிசுகின்றநாரசிங்கா- அழகியஅச்சுதா ,பெரிய திருமே
னியையுடையஜகர்த்தனே, உபேந்திரா, வெற்றிமிகுதியு மூள்ள ஹரீஇ,கருஷ்
ணனென்றுனது திருநாமங்களேஉச்சரித்துச் சந்தியாவந்தனக்க டன்களேச்செ
ய்ய, அப்படிச்செய்யுமிடந்தோறு மெழுந்தருளி அந்த வந்தனங்களே அங்
கீகரிக்கின்றாய் நாராயணனே எம்பிரானே-எ-று. (அ)

அச்சுதனேமாதவனேதேவதேவா-ஆதிபுருடோத்தமனேஹரியே மாலே ,ப
ச்சைநிறக்காகுத்தாவாசுதேவா-பரந்தாமனே முகுந்தாபதுமநாபா,தச்சரவி
ன்மிசைநடித்தகோவிந்தாசீர்- நாராயணு கேசவாவென் றுன்னே ,இச்சையுட
னினேப்பதுவேயெனக்குப்போதும்-இறைவ நாராயணனே யெம்பிரானே.

இ-ள்-என்னுடையகர்த்தனேஅச்சுதா மாதவா சதுர்முகஞ்சமூகாதிதே
வர்களுக்குத் தேவனே ஆதி புருஷோத்தமனே ஹரியே திருமாலே பச
மையாகிய திருமேனியையுடைய காகுத்தனே வாசுதேவனே பரந்தாமனே
முகுந்தாபதுமநாபா விஷ்ணுள்ள காளிங்க னென்னும் பாம்பின்மேல் நட
னஞ்செய்த கோவிந்தா ஸ்ரீமந் நாராயணனே கேசவா வென்று [உனதுதி
ருநாமங்களேச் சொல்லி உன்னையன்புடன் தியானம் பண்ணுவதேயெனக்குப்
போதும்,சகலாண்டங்களுக்கும் அவற்றிலுள்ளவுயிர்களுக்குந் தலைவனே நா
ராயணனேஎம்பிரானே-எ-று (கூ)

பரப்பிரமமாமாதி மூலமேநீ- படைத்தளித்திட்டழித்து விளையாடவென்
றே,திருத்தமுடன்பிரமாவாய்ச்சிருட்டித்தன்றே- சீபதியாம் விண்டுவாயுயிர்
களேக்காத்,துருத்திரனுயிரையெல்லாஞ் சங்கரித்திட்-டோருருவே மூவுரு
வாய்மூன்றுமொன்றாய், இருக்குமெழிலச்சுதநின் மகிமைசற்றும்- இமை
யவர்க்குங்காணவரிதெம்பிரானே. *

இ-ள்-பரப்பிரமமாகியஆதிமூலமேநீ சிருட்டி திதிசங்காரங்களேச் செய்து
விளையாடும்படி பிரத்தியும்ன மூர்த்தந் கொண்டு பிரமனுக்குள்-ளிருந்து
சிருட்டித்து, அப்போதே ஸ்ரீயப்பதியாகிய விஷ்ணுவாய் உயிர்களேப்பா
லனஞ் செய்து, சங்கரஷிண மூர்த்தங்கொண்டு சங்கரனுக்குள் ளெழுந்த
ருளி எல்லாவுயிர்களேயும் சங்காரம் செய்து, ஒருதிருவுருவமே மூன்றுதிரு
வுருவமாகி அந்தமூவுருவமும் ஒருருவமாகி இராநின்ற அழகிய அச்சுதனே
உன்னுடைய ஆச்சரியகுணங்கள் அந்தப்பிரமருத்திரர் களுக்கும்அறிதலரு
மையாகும் எம்பிரானே-எ-று. (ஈ)

ஏம்பிரான்சதகமூலமும்உரையும்.

சிட்டிக்கப்பிரமாவைக் கருணையாலன்-திருநாபிக்கமலத்தே சனிக்கச் செ
தாய்,மட்டற்றவுயிர்களெல்லாம் காமத்தாலே- வர்த்திக்கமன்மதனே மனத்
ற்றதாய்; தெட்டுற்றவிப்புவியிற்பிறந்த வெல்லாம்- நீருக்க 'வுருத்தானே
பிரமனீந்தால்,இட்டத்தே யேகனுயிராமலிங்கன்- ஏன்செய்தாயச்சதமே
யெம்பிரானே.

(இ-ள்-)சகலாண்டசராசரங்களாயும்சிருட்டிக்கத் திருவுளங்கொண்டு நீ
தகருணையாலே உனது திருநாபிக்கமலத்தில் பிரமனைப் பிறப்பித்தாய்
அளவிடப்படாத தேவர்கள் முதலிய எல்லாவுயிர்களும் புணர்ச்சியிலு
லேவிர்த்தியாகும்படி திருவுளத்தில் மன்மதனையுண்டாக்கினாய், இற்றைப்பெ
ரிய பூமியிலேஉற்பத்தியாகியயாவற்றையும்அழிக்கும்படி உருத்திரனைப் பி
ரமனுஞ்சிருட்டித்தான்; உனதுஇஷ்டத்தின்படிஏகமூர்த்தியாயிராமல்பிரமன்
மன்மதன்,சிவனென்றுமூவராயும்ஏன்உண்டு பண்ணினாய் அழியாதமுதல
வனே எம்பிரானே-எ-று-

பலர்கூடியிருந்தசந்தைகலைந்த தொக்கும்-பழுத்தாலிற் பறவைகள் சேர்
தகன்றதொக்கும், நலமாகச்சூளையொன்றில் வெந்தபாண்டம்- நாற்றிசை
ம்போயுடைந்துபோவதொக்கும், சலமீதின்மிதந்திரண்டுகாட்டடங்கூடிக்
சடக்கெனவே பிரிந்ததொக்குஞ் சமூசாரந்தான்; இலதாகத் தெளிந்தனத
திருத்தாள்போற்றி-ஈடேறநினைவிப்பாயெம்பிரானே-

(இ-ள்-)பலபேர்கூடியிருந்து தங்கள்தங்களுக்கு வேண்டிய பண்டங்களை
வாங்கியபின்புஅவ்விடத்திலேநில்லாமல் கலைந்து போகின்ற சந்தையைப்
போலவும்,பழுத்தஆலமரத்தில்கிளிமுதலியபறவைகள் வந்துசேர்ந்து அ
ஆள்ள கனிகளைத்தின்ற பின்பு கூட்டங்கலைந்து போவது போலவும்,ஒருவ
ளையில் நன்றாக வேகும்வகையில் ஒன்றின்மேலொன்று அடுக்காக இருந்த
பாண்டங்கள் வெந்தமாத்திரத்தில் அடுக்குக்கலைந்து நான்குதிக்கு களிலுப
போய்உடைந்து போவது போலவும், நீர்வெள்ளத்தில் மிதந்து கொண்டி
ருந்த இரண்டுகட்டைகள் காற்று மோதுதலால் நெருங்கிவந்து ஒன்றோ
டொன்று சேர்ந்திருந்து உடனே பிரிந்து போவது போலவும், தாய், தந்
தை, மனைவி,புத்திரர், மற்றபந்துக்கள்என்று சொல்லும்படிதாங்கள் செய்
தநல்வினைதீவினைகளாலேபிறந்து ஒருகுடும்பமாகஇருந்து இருவினைப்பய
ன்களையும்அனுபவித்து அவ்வினைகளற்றமாத்திரத்தில் ஒருவரோடொருவ

சால்லாமலேஇறந்துபோகின்ற சமுசாரவாழ்க்கையானது, நிலையில்லாத
தன்றுஉண்மையறிந்து உன்னுடையசீர்பாதங்களேவணங்கிப்பிறவிக்கடலி
ின்றுநீங்கி நித்திய சுகத்தையடைய நல்லெண்ணத்தைத்தந்தருளாய்எம்பி
ானே:-எ-று- (உ)

றக்கொடியபவமெடுத்தாலதினாறுண்டில்-ஐம்பதுநித்திரை போமற்றைம்
துண்டில், சிறுக்குழந்தைபேதையொடு காமனென்றே- திரிந்துபசிபிணி
ப்பத்துன்பமெய்தி, கறுத்தமயிர் வெளுத்துடலங் கூனிப்பல்போய்க்-
ாதுகெட்டுக்கண்மூடிக்குழறிப்பேசி, இறக்கமற்றுக்கிடந்திறக்கும்பிறவிவே
னடேன்- இனிக்களையேற்றச்சுதனேயெம்பிரானே. *

(இ-ள்)மிகவுங் கொடுமையாகிய மனிசசன்மமெடுத்தால், அந்தச்சனனத்
க்குவிதித்தநாளவயதுவரையில்ஒருபுருஷனிருப்பானுகில்ஐம்பதுவயதுநி
திரையில்கழியும், மற்றஐம்பதுவயதில்சிறுகுழந்தையாகவும், பாலனுகவும்,
ாமியாகவும்வளர்ந்துஒருபயனும்பெருமலிருந்துப்பசி,பிணிவியோகி
நானுவிதத்துக்கும்இவைகளேயடைந்துப்,கறுத்தமயிர்வெளுத்துப் போய்உ
ல்வலேந்துபற்களுதிர்ந்துகாதுசெவிடாகிக் கண்பார்வைகெட்டிக்குழறி
குழறிப்பேசி அன்னபானுதிகளேஉண்பித்தாலும் இறக்கமில்லாமல் படுத்தி
க்கையிலேயே கிடந்துஇறக்கின்ற பிறவியைநான் அருவருத்து உன்னைச்
ரணமடைந்தேன் இனிப்பிறவிக்கடலினின்றும் என்னைக்களையேற்றவாய்
ழியாதமுதற் கடவுளே எம்பிரானே-எ-று- (உக)

ாதத்திற்பிரியாமலிருக்குங்கங்கை- பரமேட்டிபிறந்ததந்தி பதுமத்தண்பூ
நீதந்தவுத்தமாமணிபூணரம்-தேசுளபிதாம்பரநீயுக்குங்கூறை,வேத
தைவிரிஞ்சனுக்குநீபோதித்தாய்- விண்ணவர்க்குன் திருவ்வையாலமுதமீந்
ாய், ஏதிற்றராணனே யுனைப்பூசிப்பேன்- இமைய வர்தம் பெருமானே
யம்பிரானே. *

(இ-ள்)அடியேன்சுத்தநீர்த்தத்தால்உன்னைத்திருமஞ்சனஞ் செய்யலாமெ
ருவல், தன்னிலேமூழுகினவர்களுக்குஎவ்வகைத்தீவினைகளும்போக்கிப்பே
னத்தைத்தருகின்றகங்கையானது, உனது சீர்பாதத்தில்பிரியாமல் தங்கியி
ருக்கின்றது, அடியிலுஞ்சுத்தநீர்த்தமில்லாமையால் திருமஞ்சனஞ் செய்யா
ல்உத்தமமாகியமலர்களால் அருச்சனைசெய்யலாமென்றுவல், அண்டங்களை
ம் அவற்றிலுள்ள உயிர்வருக்கங்களேயும் படைத்தபிரமன் உற்பத்தியாயின
கியகுளிர்ந்ததாமரைப்பூ உனதுதிருவுந்தியாயிருக்கின்றது, அதனிலும்உ

தூமமாகிய மலரில்லாமையாலே அருச்சிப்பதை யொழித்து மிலையுபசாரத்தி
னாற்பரணத்தால் உன்னை அலங்கரிக்கலா மென்றால் யாதொரு குற்றமு
மில்லாத தெய்வமணியாகிய கௌஸ்துபமானது உனது திருமார்பில்தரித்த
பூஷணமாய்க்கொண்டிருக்கின்றது, அதனிலும் உயர்ந்த ரத்தின மில்லாமையால்
அலங்கரிப்பதைவிட்டு நல்லவஸ்திரத்தை உனக்கு உடுக்கலா மென்றால்மிகுந்த
ஒளியுள்ள பீதாம்பரமான தும் நீ உடுக்கின்றவஸ்திரமாயிருக்கின்றது, அதனி
லும் நல்லவஸ்திர மில்லாமையாலே உடுப்பதைத்தவிர்ந்து வேதமந்திரங்க
ளாலே உன்னைத் தோத்திரஞ்செய்யலா மென்றால், அந்த மந்திரங்களைப்பிர
தியாதிக்கின்றசதுர்வேதங்களும் பிரமனுக்கு நீஉபதேசித்தவைகளாயிருக்கி
ன்றன, அவற்றிலுஞ்சிறந்த மந்திரஞ்சொல்லுகின்ற நூல்களில்லாமை
யாலே அம்மந்திரங்களால் தோத்திரிப்பதை நீங்கித் திவ்வியான்னத்தினால்
உனக்கு நிவேதிக்கலா மென்றால்கடைகின்ற தேவர்களுக்குள்ளும் அசுரர்க
ளுக்குள்ளும்நீவெவ்வேறுதேவாசுரத்திருவுருவங் கொண்டிகடைந்தும், கூர்மா
வதாரமாகிமந்தரமலையைச்சுமந்தும், தன்மந்திரியவதாரஞ்செய்துஅமிர்த
கலசத்தைத்தாங்கிவந்தும், மற்றும்பற்பலமூயற்சிகள்செய்தும்திருப்பாற்கட
லிற்பிறந்த அமுதத்தை,யாவருக்குந்தாயுமானவேணென்று தெரிவிப்பது
போலப்பெரியபிராட்டியாருடைய திருவுருவங் கொண்டு உனதுதிருக்கரத்
தாலேதேவர்களுக்கே தந்தருளினாய், ஆகையால்எதைக்கொண்டு உன்னைப்பூ
சிப்பேன்நாராயணனேதெய்வநாயகனேஎம்பிரானே-எ-று. (ஐச)

அந்நாதியாமரியேயுனதுநாமம்- ஆயிரத்திற்பலவாதலொன்றேயாதலால், பன்
னுளுங்கீழ்குலத்தோரென்னுவாரில்-பாலிருக்குங்கோபாலரிற்பண்டமெர
ப்பார், நின்னுமமென்னுமற்றருக்கம்பேசும்- நெறியில்லார்குலம்பார்ப்பா
ரானக்காலும், இன்னுமைகள்ளிருக்கு நவபாண்டத்திற்- கிணையிதுசத்தியமாகு
மெம்பிரானே.

(இ-ள்)பலப்பிறவிகளிலும் சண்டாளகுலத்தில் பிறந்துவந்தநீசர்கள் உன்னு
டைய சகஸ்திரநாமங்களில்பலதிருநாமங்களே யாவது ஒருதிருநாமத்தையா
வதுதியானிப்பார்களே யாகுல் அவர்கள், வேதபுருஷனும் விஞ்சிவேந்தி
ராயிர்களாலும் அறியப்படாத உன்னை அதிசுலபமாகஎடுத் துவளர்க்கப்பெ
ற்றபெரும்பாக்கிய முள்ள கோபாலர்களது மாளிகைகளிலுள்ள பாற்குட
த்தையொப்பாவார்கள், உன்னுடையதிருநாமத்தைத்தியானிக்காமல் உன்ம
த்தங்கொண்டு நீபரனல்லனென்று தருக்கமிடுகின்ற அவைதிகமார்க்கத்தார்க
ள்குலத்தால் பிராமணரான போதிலும் யாவரும் இகழத்தக்கமதிநிறைந்த
புத்தியாண்டத்துக்கு ஒப்பாவார்கள் இப்படிச்சொல்லுதல் சத்தியமாகும்

பிறப்பிலியாயெழுரியே எம்பிரானே-எ-று. (எடு)

வளைவானபெரும்பல்லு மெரிந்தகண்ணும் - மைம்மலிபோற் காத்திரமுமு
டையகால்ன், அளவானபெரும்பாசங்கொண்டேயென்றன்-அகத்தைப்பி
ணமாக்கியாவியென்னுய், ஒளிமேவுமுயாதனுசரீரக்கூட்டில்-, உறப்பண்ணித்
தண்டிக்குமிடரானுயேன், இளையாமலிப்பொழுதேயடிமை கொள்வாய்-
இறைவாதாராயணனே யெட்பிரானே. *

(இ-ள்)வளைந்தபெரும்பற்களையும், நீப்பொறிசிந்துகின்றகண்களையும், நீல
மலைபோன்றஉடலையுமுடையயமனுனவன்,தான்கொண்டுபோகுஞ்சேதனர்
களைக்கட்டுதற்குத்தக்க அளவாகியபெரும்பாசத்தினுல் ஆன்மாவென்னும்ஒ
ளியுள்ளபொருள்வேறுகும்படிச்செய்து அந்த ஆன்மாவையாதனு சரீரமா
கியகூட்டிலேபுகச்செய்துதண்டிக்கும் நாலுவிதஉபத்திரவத் துன்பத்தால்
நாயையொத்தநான் அப்போது மெலியாமல் இப்போதேதாசனுக்கிக்கொ
ள்யாவருக்குந்தலைவனே நாராயணனேஎம்பிரானே-எ-று- (எசு)

அச்சுதநின்மெய்யடியாருகந்தேயிட்ட- தினைவெளினுமகமேருவாகக்கொ
ள்வாய், நிச்சயமாயுனைநம்பியெண்ணுமூடர்- நினைந்நிடிலோர் நூற்றையொ
ன்றுகவுங்கொள்ளாயால், நச்சிமற்றபிதிர்களுக்குந் தேவருக்கும் - நமக்களித்
துப்படைத்தவெல்லாதநியின் வெள்ளம், எச்மற்றசமுத்திரத்தே சேருமா
போல்- இனிதுநின்பாலடைந்திடுமாலெம்பிரானே. *

(இ-ள்-) ஆலோசிக்குமிடத்துப்பரமவைதிகமார்க்கத்தார்களாகிய உன
தடியார்கள் உள்ளமுவந்துசமர்ப்பித்தபொருள் அணுவளவாயிருப்பினும் அதனை மகமேருவளவாகக் கொண்டு திருவுளமுவப்பாய்,நீ
யேமுதற்கடவுளெனத்திடமாக உன்னை நம்பித்தியானஞ்செய்யாதமூடர்க
ள்சமர்ப்பிக்கும்பொருள்கள் நூறுமிருப்பினும் அந்தநூறுபொருள்களையும்
ஒருபொருளாகவாவதுஅங்கீகரியாய்,மழைபெய்தநினுல்பெருகியோடும்ந
தியின் வெள்ளமானது கடலிலிடத்தே போய்ச்சேரும்விதம்போலப்பலர்
நேராகஉன்னைநமஸ்கரியாமல்மற்றபிதிர்தேவதைகளுக்கும் பிரமன்முதலிய
தேவர்களுக்கும்நமஸ்காரஞ் செய்துபடைக்கும் நிவேதனங்களெல்லாம்
மேற்சொன்னதேவர்களுக்குள் அந்தர்யாமியாயெழுந்தருளிய உன்பக்க
லேஇனிதாகவந்துசேரும் அச்சுதனேஎம்பிரானே-எ-று. (எஅ)

தந்தைதாய்நிலும்பண்டம்பிள்ளைவாயில்-தானிட்டசேடத்தைக்கேட்டுவாங்

இச், சிந்தைமகிழ்ந்தின்பமுறத்தின்னும்போல்-தேவாவுன்னுடைமைநீயடி
யார்க்கே, அந்தவுன்றன்மெய்யடியார்பத்தியாலே- அளித்தசூழ முதியை
ண்டேப்பமிட்டே, இந்திரைக்குமிதுநிட்டங்காட்டித்தொண்டர்- ஏற்றம
தைத்தெளியவைத்தாயெம்பிரானே-

(இ-ள்-) தங்கள் குழந்தையானது தின்னுதற்குரிய பண்டத்தைத் தின்
றுமீதியாய் எச்சில்பட்டதைத் தாய் தந்தையர்கள் அக்குழந்தையினிடத்தி
ல்பாசித்துவங்கி மனங்களித்தமிகுந்த இன்பத்தோடு தின்பது போல
ல்லாப்பொருளுக்கும் இறைவனே உன் சொத்தாகிய உலகப் பொருள்க
ளே அடியார்களுக்குத் தக்கபடி நீகொடுக்க அவற்றைப் பெற்ற உன்னுடை
ய அந்த மெய்யடியார்கள் பத்தியோடு சமர்ப்பிக்கும் * கூழமுதையுட்கொ
ண்டருளிஎப்பமிட்டுச்சீரங்கநாயகியாருக்கும் இந்தத்திட்டத்தைக் காட்டி
அடியார்களுடைய பிரபாவத்தை யாவருக்குந் தெளிய வைத்தாய் எம்
பிரானே-எ- (அ)

*கோயிலில் ஆயர்குலத்திற் பிறந்தராமானுச வல்லியென்னும் ஒருபிரம
ணனியானவர் கோயிற்பசுக்களை மேய்க்கின்ற அரங்கநாதனென்னும் தம
து பேரனுக்கு வழக்கப்படி கூழமுது கொண்டு மேய்க்குமிடத்திற்குச்
சென்றனர். அப்படிச் செல்கையில் கோயிலில்நம்பெருமாள் திருவிழாபுற
ப்பாடாகி மகோச்சவங்கண்டருளுகின்ற உபய வேதபாராயண கோஷ்ட்
டியும்வாத்திய வோசையையும் கேட்டு நம்பெருமாளைச்சேவிக்க வேண்டு
மென்கிற அவாவால் வெகு பரபரப்புடன்போய் அச்சிறுவனை அங்கு கா
ணாமல், ரங்கநாதா ரங்நாதா வென்று அவன் பேரிட்டு அழைத்தனர், அவ
ருடையஆராமையைக்கண்டு பக்தவச்சலராகிய அழகிய மணவாளர் அச்சி
றுவனைப் போலத் திருவுருக்கொண்டோடிவந்து அக்கூழமுதமுண்டு செ
ன்றருளித்தாம் அமுது செய்ததைத் திருவரங்கநாயகியாருக்கு எப்பமிட்
டுக்காட்டினர், அதுமுதல் ஒளவாசத்தியென்றஒருமகோச்சவமும்தடக்கத்
திருவுள முகந்தனர், இச்சரிதை ஸ்ரீரங்கமான்மியத்தில் சுருக்க மொழியக்
காணலாம்.

மன்னவராய்வாழ்ந்துசுகித்திருந்தபேரை- வறுமையராய்ச்சலித்திரந்துதிரி
யவைப்பாய், அன்னமிதாயிருந்துதிரித்த பேரை- அதிகராய் வாழ்ந்து

கித்திருக்க வைப்பாய், நின்னருளே யல்லாமல் யாவருக்கும்- நீனைத்தப
தேதொண்ணுதாகையாலே, என்ன திருவிளையாட்டின் மகிமைசற்றும்- இ
மையவர்க்குங் காணவரி தெம்பிரானே. *

(இ-ள்)-அரசர்களாய் வாழ்ந்து சுகமாக இருந்தவர்களைத் தரித்திரர்களாகி
உடலோடு கூடிவாழ்தலே வெறுத்துக்கொண்டு திரியும்படி வைப்பாய், உ
ண்பதற்கும் உணவு கிடையாமல் யாசித்துத் திரிந்தவர்களைச் செல்வத்தில்
அதிகர்களாகிவாழ்ந்து சுகமாயிருக்கவைப்பாய், உன்னுடைய நிரேதுக
டாட்சத்தாலே யல்லாமல், எவர்களாவது தாங்கள் நினைத்த பிரகாரம் ஒன்
றைப்பெறமுடியாது, இப்படி சேதனர்கள் யாவராயும் நடத்து வதிலும்
இது என்னமாயாசாதுரியத்திருவிளையாட்டாயிருக்கின்றது உனது ஆச்சரி
யசேஷ்டிதத்தைச்சிறிதும்பிரமன் முதலிய தேவர்களாலும் அறிந்து கொள்
வது அரிதாகும் எம்பிரானே-எ-று (ங்கூ)

அருளுடன் மீன்பார்த்தக் காற்கினேதான் குஞ்சாம்- ஆமைமுட்டைதாய்நி
னைந்தாற் குட்டியாகும், பரிசத்தாற் பறவைமுட்டை குஞ்சதாகும்- படியி
லையிற்கடையாக்கிடக்குநாயேன், கருணையினற் குருமூர்த்திபார்த்த தா
லும்-கருத்தாரத்திருவுளத்தேநினைத்ததாலும், இருபதத்தைத்தலையில்வைத்த
பரிசத்தாலும்-இருளறுத்தேனச்சுதனே யெம்பிரானே. *

(இ-ள்)தாய்மச்சமானது கருணையோடு பார்த்த மாத்திரத்தில் தன்னினை
யிலுள்ள சிறுமுட்டைகள்குஞ்சுகளாகும், தாயாமையானது தூரத்தினின்று
நினைத்தால் தானிட்டமுட்டைகள் குட்டிகளாகும், தாய்ப்பறவை யானது
தன் இறகுகளால் அணைத்துக் கொண்டிருந்தால் தான்பெற்ற முட்டைகள்
குஞ்சுகளாகும், இப்பூமியில் இந்த நீர்வாழ்வன வற்றிலும் பறவைகளிலும்
கடைப்பட்டவைகட்கிடக்கும் நாயையொத்த நான் என்னுடையஆசாரியர்
என்னைக்கருணையோடுகடாக்சித்தருளினதிலுமும், இவன்உஜ்ஜீவிக்க வேண்டு
மென்று பூரணமாகத் திருவுளத்திலே நினைத்ததிலுமும், தமது உபயதிரு
வடிகளே என்தலையில்சூட்டியபரிசத்திலுமென்னுடைய பேதைமை யிருள்
நீங்கி தீபமுதற் கடவுளென உண்மைஞானமடைந்தேன் அச்சுத னென்னு
த்திருநாமமுடையானே எம்பிரானே-எ-று (உ)

சக்கரஞ் சங்கிரு புயத்திற் பொறித்த பின்பு- தையுடனே பல்லிரண்டு தி
ருமண்சார்த்திச், சிக்கெனவேதாசனென்று நற்பேரிட்டுச்-செவிகுளிர மந்

திரமுமுபதேசஞ்செய், தக்கினியிற்செந்துளவக்காட்டங் கூட்டி- ஆவினை
யாற்புனர்சனன வோமம் பண்ணி, இக்கிரிகை யைந்திலுற் றிருத்திக்காக்
கைக்-கெழிற் குருவாயுதித்தனையே யெம்பிரானே. *

(இ-ள்) தனையுடனே வலத்தோளில் சுதரிசனத்தையும் இடத்தோளில்
பாஞ்சசன்னியத்தையும் அங்கிதஞ்செய்து, பின்பு நெற்றி முதலிய பன்
னிரண்டுதானங்களில் திருமண் குறியிட்டு வேறொருவருக்குச் சேஷி பூதன்
நீயல்லை ஸ்ரீசர்வேசுரனுக்கே தாசனென்று நல்லதிருநாமமிட்டுச் செவிளு
ரிர மந்திர ராஜத்தையும் துவயத்தையும் சரம சுலோகத்தையும் உபதேசி
த்து, அக்கினியில் செந்துளவச் சமிதைகள் சோத்துப் பசுநெய்யால் பன
ரிஜனன வோமம் பண்ணி, இந்தக் கிரியைக ளைந்திலும் அடியேனைத் திரு
ந்தச்செய்து காக்கும்பொருட்டு நூல்களில் சொல்லிய சதா சாரிய லட்ச
ணமமைந்தஆசாரியராய்எழுந்தருளினையே எம்பிரானே.எ-று- (உக)

மணியிசைக்க வந்திடுமான் செவியான்மாய்ம்- மகிழ் புணர்ச்சிக் காகவிபம
னினசிக்கும், கனின் விளக்கைக் கண்டு விட்டில் வீழ்ந்து பொன்றும்-
கடுந்தூண்டில் கவ்வி மச்சம் வாயான் மாளும், அணுகியளி நாசியிற் சண்
பகமோந் தோயும்- ஐம்பொறியு முடையநானலைந்திடாமல், இணையிலுப
தேசத்தாற்றிருத்திக் காக்கைக்-கெழிற்குருவா யுதித்தனையே யெம்பிரானே.

(இ-ள்-) வெண்கல மணியொலிக்க அவ்வோசை கேட்கவந்து ஆதந்தித்
துமெய்ம்மறந்தமானுனது அச்சமயத்தில்வேடுவர் பற்றிக் கொள் வதினுலே
செவிப்புலனுல்மாய்கின்றது, மகிழ்ச்சியாகியசரீரப்புணர்ச்சிக் காகப்பெண்
யானையானது தன்னை ஆண்யானைபுணர்ந்தபின் எடாமற்போமேயானுல்கிட
ந்தகிடக்கையில்கிடந்துஇறக்கின்றது, கண்ணுலே விளக்கைக்கண்டுவிட்டிலா
னதுஅவ்விளக்கில்வீழ்ந்திறக்கின்றது, கொடிய தூண்டிலிலுள்ள உணவைக்
கவ்விமீளுனது வாய்ப்புலனுல்சாகின்றது, வண்டானதுசண்பகமலரைச்சே
ர்ந்தமனத்தைமோந்து நாசிப்புலனுல் இளைத்து மரணமடை கின்றது,
அந்த ஐம்புல வாசைகளையு மொருமிக்க வுடையதான் அவற்றைப் போல
அலைந்து அழியாமல் ஒப்பில்லாத திருமந்திரோப தேசத்தால் என்னைத்தி
ருந்தச்செய்து காக்கும்படி அழகிய ஆசாரிய மூர்த்தமாய் வந்து எழுந்த
ருளினையே எம்பிரானே.எ-று- (உஉ)

ஆகார நித்திரைமை துனம் பயந்தான்-அனைத் துயிர்க்கு மூண்டு நார்ச்சதி

ளுணம், கேசாரு நல்வினை தீவினை யிரண்டால்- சிற்றின்பே பேரின்பச் சேர்த்திடாமல், நாசாரி வாகனனே கேசவ நின்- நற்பதங் கல்லூடேறக் குருவுரைக்கும், சகாந்த வுபதேசப் பொருளே நம்பி- எண்ண மெய்ஞ்ஞானத்திருவாயெம்பிரானே. *

(இ-ள்-)எல்லாச் சேதனர் களுக்கும் ஆகாரம், நித்திரை, புணர்ச்சி, பயம் சாதாரணமாயுண்டு, அவர்களுள் மனிதப் பிறப்பினர் களுக்கு அதிஞான வுணர்ச்சியுண்டு, அப்பிறப்பினர்களில் ஒருவனுகிய நான், விட்டொழியாது நிற்கின்ற நல்வினையால் கிடைத்த நசுரமாகிய இகபோகமே நித்தியானந்த மென்று கருதித் தீவினையால் மதிமருண்டு அதில் அழுந்திக் கெடாமல் உன்னுடைய சீர்பாதங்களைக் கண்டு கூடுமாறு ஆசாரியர் திருவாய்மலர்ந்தருளிய தனியிடத்தினின்று சிந்திக்கத்தக்க திருமந்திரார்த்தத்தை உண்மையெனக் கருதிச் சிந்திக்கும் படியான மெய்ஞ்ஞானத்தைத் தந்தருளாய் வேதசுரூபியாகிய பெரிய திருவடியை வாகனமாகவுடையானே பிரமனும் உருத்திரனும் உன்னிடத்தில் பிறந்த காரணத்தாலே கேசவனென்னுந் திருநாமத்தையுடையானே எம்பிரானே-எ-று. (உரு)

பெருத்திருந்த பூசினிப்பூவின் கீழ்க்கொட்டை- பெருத் துயர்ந்து காயாப்பூத்தேய்ந் தற்றுப்போல், சருத்திலுறு நல்லறிவை வீழ்முட்டாமல்- சுபடமுறு புல்லறிவு மேலிட்டநாள், குருப்பகரு முபதேசப் பொருளே நம்பக்- குறைவறவேயுருவேறத்திருவுமேவி, இருட்படநந்து மெய்ஞ்ஞானம் விளங்கச் செய்தாய்-இறைவா நாராயணனே யெம்பிரானே. *

(இ-ள்-)பெரியதாயிருந்த பூசினிப்பூவின் கீழிருந்த பிஞ்சானது நாளுக்குநாள் வளர்ந்து காயாகவே மேல்நின்ற பூக்குறைந்து சிறுப்பது போல உள்ளத்தில் பொருந்திய ஞானத்தைப் பெருக வொட்டாமல் கபடத்தோடுகூடிய அற்புத்தியானது அதிகவிருத்தியாகி மேலிட்ட நாளில் ஆசாரியர்உபதேசித்த திருமந்திரத்தின் பொருளே உண்மையெனக் கொண்டு அநுட்டானத்தில் யாதொரு குறைவுமில்லாமல் உருப் போலவதினால் அறிவின்செல்வம் வளர்ந்து அஞ்ஞானவிருள் பறந்து நினைக்கோதாசனென்னும் மெய்ஞ்ஞானம் விளங்கும்படி என்னைத்திருத்திக் கொண்டாய் இறைவனே நாராயணனே எம்பிரானே-எ-று- (உச)

உப்புநறுநெய்யுநறு கருப்பஞ்சாற்றின்-உறுதெய்யினுறுதி தயிருறுதி யுள்ற

ன், வைப்பெனும் பாலுத்தி நன்னீருகதியென்னும்-வினைச டமேமுண்டாக்
கித்தீவுண்டாகக்கி,கப்பலுடன்சோங்குமரககலமுண்டாக்கிக்- கடலோடிக்க
ரையேறக். கற்பித்தாப் போல், இப்பிறவிக் கடலேமூழ் கடந்தேபுய்கைக்
-கெழிற்குருவா யுதித்தனையே பெம்பிரானே *

(இ-ள்)உப்பக்கடல் ,தேன்கடல் ,கருப்பஞ் சாற்றுக்கடல் ,நெய்க்கடல்,
தயிர்க்கடல் ,நீரறியாயிலமர்ந்த திருப்பாற்கடல், நன்னீர்க்கடல் ,என்னும்
எழுகடல் களைச்சிருட்டித்து அவற்றி னிடையிடையே தீவுகளுண்டாக்கி
அவ்விடங்களுக்கு ச்செல்ல விருப்பின வர்கள் கப்பல் சோங்கு ஓடங்களை
ச்செய்து கொண்டு கடலின் மேற்சென்று கரையேறக் கற்பித்தது போல
த் தேவப்பிறப்பு முதலிய எழுவகைப் பிறப்புக்கடலைக் கடந்து அடியேன்
உய்யும் படி அழகிய குரு மூர்த்த மாய் எழுந் தருளினையே எம்பிரா
னே.-எ-று- (உடு)

ராமாவென்றெருகா வுரைத்தாலுன்றன்- திருநாமமாயிரத்துக் கிணையா
மென்றே, நீராருஞ்சடையான்பாகத்துமைக்கு -நிகழ்த்திடினம்மந்திரத்து
க்கிணையொன் றுண்டோ, பாராருமதுனையுச்சரித் தீடேறப்- பத்தருவி
ராமனென்றேமுக்கால்வத்த,ஏராரும் பரசுராமாசீராமா- எழிற்பலபத்தி
ராமா வெம்பிரானே. *

(இ-ள்-)ஸ்ரீராமாவென்று ஒருமுறை உச்சரித்தால் அத்தாரக மந்திரவாச்
கியமுகிய உன்னுடைய மற்றதிரு நாமங்களே ஆயிரமுறை உச்சரிப் பதினா
ல் பெறக்கூடிய மேலானபயன் பெறக்கூடுமென்று கங்கையைத் தாங்கிய
சடாபாரத்தையுடைய சிவனுர் தமது இடப்பாகத்தில் தங்கிய உமாதேவிக்
கு உபதேசித்தனர், மெய்ஞ்ஞானச் செல்வராகிய ஸ்ரீருத்திர பகவான் அ
ப்படிச் சொல்லினால் அத்தித் தாரக மந்திரத்துக்கு ஒப்பாகிய ஒருமந்திர
மும்உண்டோ, உலகத்திலுள்ளவர்களும் அம்மந்திரத்தை உச்சரித்து உஜ்ஜீ
விக்கும்படி தசாவதாரங்களுக்குள் ராமனென்று மூன்றவ தாரங்களைச் செ
ய்ததவத்தி னழகு மிகுந்த பரசுராமா ஸ்ரீராமா அழகிய பலராமா எம்பி
ராமனே-எ-று- (உசு)

சிரியேதின் கோயிற்றுவாரபாலர்-செயவிசயரிருவரு நின்மே வலராகும்,எ

ரணத்தாவிரணியனேடிரணியாக்கன்-கடியராவணனுடனேகும்பகன்னன்,
மாரிநிகர்சிசுபாலனுடனேதந்த- வக்கிரனுமாகமுக்கால்வதைத் தமீன்றும்,
ஈரமுடன்பண்டையினுஞ்சாரூபத்தந்- தேற்றமுறவைத்தனேயெம்பிரானே. *

(இ-ள்)ஸ்ரீ வைகுந்தத்தில் உன்னுடைய திருக்கோயிலினது துவாரபாலர்களாகிய ஜெயவிஜயர் களிருவரும், உனது அடியாராகிய துர்வாச முனிவர் பக்கல்செய்த அபசாரத்துக்காக இட்டஉனது கட்டளையே காரணமாக அவ்விருவரும், கிருதயுகத்தில் இரணியன்- இரணியாட்சனென்றும் திரேதாயுகத்தில் கொடிய இராவணன், கும்பகருணனென்றும், துவாபரயுகத்தில் சாதுக்களுக்கு நோயை யொத்ததந்தவக்கிரன், சிசுபாலனென்றும், வந்துபிறக்க அம்மூன்று முறையும் அவர்களை வதைசெய்து மறுபடியும், அன்போடுஉனது சாரூபத்தைத் தந்தருளி முன்னையிலும் பெருமையாகவைத்தாய்எம்பிரானே-எ-று- (உ)

கரியுண்டிமூலமேயென்றமட்டில்-சராவைவதைத்தொருதொடியிற்கரிவிக்காத்தாய், உரிகின்றதுகில்வளரக்கண்ணுவென்றே-உரைத்தவிற்றிரௌபதைக்குமானங்காத்தாய், அரியெங்குமுளனெனல்கேளுரர் டாலன் சொல்லை அக்கணத்திற் றூணினரசிங்கமானும், எரிகின்றபெருந்தணலையவனுக்கன்றே- இமசலமாக்கினையரியேயெம்பிரானே. *

(இ-ள்-)கஜேந்திராழ்வானென்னும் யானையரசானது தியானித்து ஆதிமூலமேயென்றழைத்தமட்டில் முதலையைக் கொலைசெய்து ஒருதொடிப் பொழுதில் அந்தயானை யரசைக்காத்தாய், அரசர்சபையில் உரிகின்றவஸ்திரத்தினிமித்தம் ஸ்ரீகிருஷ்ணனென்ற கைகளைக் குவித்துச் சொன்ன மாத்திரத்தில் திரௌபதைக்கு வஸ்திரங்கள் ஒன்றின்மேலொன்று வளரச்செய்து மானத்தைக் காத்தாய்; ஸ்ரீஹரி எங்குமுளனென்ற சிறுகுழந்தை யாகிய ஸ்ரீபிரகலாதாழ்வான்சொல்லை அத்தகூணத்திலேதூணினின்றும் நரசிங்கத்திருவுருக்கொண்டுவெளிப்பட்டாய், இதுவுமன்றிஎரிகின்றபெரு நெருப்பை அப்பிரகலாதாழ்வானுக்கு அக்காலத்தில் பனிச்சலத்தைப் போலக்குளிரவைத்தாய் எம்பிரானே-எ-று- (உ)

திருமணிட்டு நீறுமிட்டுவேதமார்க்கச்- சீர்பெரிய யயிட்டினவர் சைவபுத்தர், ஆருகர் பாற்கர் குருக்கர் கருத்தறுண்டென்-அறுசமயத் தோகைஞ

க்கு பிறைவணியே, தருமநெறி பதிவிரத மறை யொழுக்கம்- தயைசமஞ் சத்தியமொடு ஞானடைய போக்கே, இருளறுத்து மெய்ஞ்ஞானம் விளங்க ச்செய்வாய் எங்களுராயணனே யெம்பிரானே. *

(இ-ள்-)ஊர்த்துவபுண்டரந்தரித்துப்பரமவைதிகமார்க்கத் தார்களாகிய பெரியசீர் வைணவர் களும், திரியக்குப் புண்டரந்தரித்துச் சைவர்களும், புத்தர்களும், சமணர்களும், பாஸ்கரர்களும், திருக்கர்களு மாகிய கடவு ளுண்டென்கிற அறுசயத் தார்களுக்கும் பலப்பிரத ஞானதேவனீயேயம், அப்படி யிருந்தும் பரம வைதிக மார்க்கமும், அந்தமார்க்க நூல்களாற் சொல்லப்பட்ட தருமவழியும், உன்னையன்றித் தேவதாந் தரங்களைத் தொ ழாமையும், சேதனர்களிடத்தில் தயையும், சமபுத்தியும், யதார்த்தமும், வராகிய மூ முடைய வர்களுக்கே அஞ்ஞாநத்தகாரத்தை யொழித்து ந்தத்துவ ஞானத்தை விளங்கச்செய் வாய் எங்களுடைய நாரா யணனே எம்பிரானே-எ-று. உக

திருக்கச்சி நம்பியுனை நம்பிச்செம்பொற்- திருவால வட்டக் கைங்கரியஞ் செய்து, பெருக்க மகிழ்ந்தேதிருவாய் மலர்ந்துபேசிப்-பேதமற்றுத்திட்ட மாயிருக்க வோர்நான், கருக்கவினி லருளாளன் மறைவிற் றாங்கக்- காணுமலருளாளா வென்ன நீவந், தரக்கமுடன் கைவிளக்குப் பிடித்துச் சென்று ப்- இயல்சக்கரா யுதனே யெம்பிரானே *

(இ-ள்-)திருக்கச்சி நம்பிகள் நீயேமுதற் கடவுளென்று உன்னை நம்பிச் செம்பொன்னைச் செய்த திருவாலவட்டக் கைங்கரியஞ் செய்ய, நீஅவர்செ ய்யுங்கைங் கரியத்துக்கு மிகவுந்திருவுளமுகந்து நீசுவாமி யென்றும் அவர் தொண்டரென்றும்பேதமில்லாமல் திருவாய்மலர்ந்துவார்த்தையாடிக்கொ ண்டு இந்த முறையாக நடந்து வருகையில் ஒருநாள் தம்மோடு வந்த அரு ளாளனென்கிற சிறுவன் மிகுந்த இருளடர்ந்த நடுராத்திரிப் பொழுதில் ம றைவான ஓரிடத்தில் நீத்தினைசெய்ய, அஞ்சநியமல்அருளாளா அருளாளா வென்று அழைத்தபோது நீ அச்சிறுவனைப் போல உருக்கொண் டோடிவ ந்து மிக்கருணையோடு அந்நத்திருக்கச்சி நம்பிகளுக்குக் கைவிளக்குப் பி டித்துக்கொண்டு முன்னடந்தாய் நின்னடியார் பக்கலில் அபசாரப் படுதி ன்ற துஷ்டசனங்களைத் தேடித்திரிகின்ற சுதரிசன மென்னும் சக்கராயுதத கையுடையாளே எம்பிரானே-எ-று- (கூல)

நிறத்த பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார்- திருமழிசையார் விஷ்ணுபுத்
ராழ்வார், அதிக்கை மிகுகீகுல சேகராழ்வார் ஞான- ஆரணத்தைத் தமி
ழ்செய நம்மாழ்வார் பத்தி, குறைச்சலிலாத் தொண்டரடிப் பொடி யாழ்
வார்பண்- குளிர்ந்தசொல்லாலிசைபாடுத்திருப்பாணாழ்வார், இறக்கவெட்டி
ப்பறித்ததிருமங்கையாழ்வார்- இவர்பதின்மர்க்கருளினையேயெம்பிரானே *

(இ-ள்) மெய்ஞ்ஞானத்திறம்பெற்ற பொய்கையார், பூதத்தார், பேயார்,
திருமழிசையார், விஷ்ணுபுத்தாரார், தமதுசேஷித்துவத்தை விண்ணப்பஞ்
செய்தருளிய குலசேகரர், ஞானபாகமாகிய தமிழ்வேதத்தை வெளியிட்ட
மூலிய சடகோபர், பூரணபத்தியுடைய தொண்டரடிப் பொடியார், குளி
ர்ந்தஇசையமைந்த பாசுரங்களால் உன்னைப்பாடிய திருப்பாணர், எதிர்ப்
பட்டவர்களுக்குப் பிறவிப்பிணி அகலநீக்கி அவர்களிடத்துள்ளபொருள்க
ளைப்பறித்துத் திருவரங்கம் பெரிய கோயிற் கைங்கரியஞ் செய்ததிருமங்
கைமன்னர் ஆகியஇத்தரைப் பிரபத்தி நிஷ்டர்கள் பதின்மர்களுக்கும்
உனது கருணையைப் பாலித்தாயே எம்பிரானே-எ-று- (ஈக)

பத்துப்பே ராழ்வர்கடமி னம்மாழ்வர்- பாதாரவிந்தத்தைப் பணிந்து
பாடி, முத்திபெற வருமதுர கவியாழ்வாரும்- மூதறிவாலுயர்வேதப் பொ
ருளைக் கொண்டே, உத்தமமாம் பாமாலையொடு பூமாலை- உகந்தனக்குத்
தருங்கோதை யாருங்கூட, இத்தலத்திற் பன்னிரண்டு பேராழ்வா ரென்-றெ
ண்ணமுறவைத்தனையே யெம்பிரானே- *

(இ-ள்) முனிவர்களினும் பெருமையாகிய பத்தியாழ்வார்களில் நம்மாழ்வா
ருடைய திருவடித் தாமரைகளைவணங்கி அவரையேபாடிப் பரம பதத்தை
அடைய அவதரித்தமதுரகவி யாழ்வாரும், மூதறிந்தஞானத்தால் உயர்ந்த
வேதப்பொருளையமைத்து உத்தமமாகியபாமாலையோடு பூமாலையைப் பி
ரிதியாக உனக்குத் தந்த சூடிக்கொடுத்த நாச்சியாரும் ஆகிய ஆசாரியாபி
மான நிஷ்டர்களிருவர்களோடு இந்தப்பூமியில் ஆழ்வார்கள் பன்னிருவர்க
ளென்ற பாமவைதிக மார்க்கத் தார்கள் சிந்திக்கும் படிவைத்தாய் எம்பி
ரானே-எ-று- (ஈஉ)

அருள் பெருகு பொய்கையா ருறங்கப்பூதத்- தாழ்வார் வந்திருவரா யிருக்
கப்பேயார், சொரிமழையிற் போய்மூவராகிநிற்கச்-சுரர்க்கரிய நீநாலாம்
பொருத்தோன்றி, கருணையுடனம்மூவர் பாடல்கேட்டுக்-கமலமலர்த் திருமு

ங்கைமார்பின்மேவ, இருளறவே கோவலூராயனொன் - றிடைகழியி னின்றனையே யெம்பிரானே.

*

(இ-ள்-) ஸ்ரீசரீவேசரனுடைய உன்னையடைந்து உஜ்ஜீவியாத அதமர்கள் உஜ்ஜீவிக்கும்படி அவர்களிடத்துக் கருணைபெருகுகின்ற பொய்கையாழ்வார், உன்னுடைய மாயாசாதுரியத்தால் மகரந்தகாரமும் பெய்கின்ற பெருமழையுமுண்டாகவே ஒரு ஸ்ரீ வைஷ்ணவருடைய இடைகழித்திண்ணையில் சயனித்து நித்திரைசெய்தருள, பூதத்தாழ்வார் அங்கேயெழுந்தருளி அடியேன் சயனிக்க இடமுண்டோ வென்ன, சுவாமி இங்குஒருவர் படுக்கலாம், இருவரிருக்கலாம் தேவரெழுந்தருளி இருக்கலாமென்று விண்ணப்பஞ்செய்ய, இருவருமா யிருந்தார்கள், பின்பு பேயாழ்வாரும் இடந்தேடி அத்திருமாளிகைக்கே வந்துசயனிக்க இடமுண்டோவென்று கேட்டருள, முன்னெழுந்தருளியிருந்த இருவர்களும் இந்தத்திண்ணை ஒருவர் படுக்கலாம் இருவரிருக்கலாம், மூவர்நிற்கலாமென்று சொல்லியருள, இருவரும்உள்ளே சென்றருளி மூவருமாய் நின்றுகொண்டு ஒருவரை யொருவர் விசாரித்துப் பகவத் சம்பந்திகளா யிருக்கையைக் கண்டு சந்துஷ்டர்களா யிருக்கையில், தேவர்களுஞ் சொல்லுதலரிய நீ இவர்கள் சேர்த்தியைக் கடாட்சித்து இப்போதே காரியங்கொள்ள வேண்டுமென்று அந்தப்பரமயோகிகளுக்கு இடையே நாலாம்பேராகத் தோன்றி, நெருக்கமுண்டாக்க, முதலாழ்வார்கள் மூவரும் மூன்றில்லாத நெருக்கம் இப்போதுண்டான தென்னென்று நினைத்தருளிப் பொய்கையார் கண்ணிருள் கெடச் சூரியதீபத்தை ஏற்றிப்பார்க்க, பூதத்தார் ஞானதீபத்தை ஏற்றிப்பார்க்க, பேயார் இந்த இரண்டுபகல் விளக்காலும் இராவிளக்காலும், களவுசெய்யினும் ஒளிக்கவொண்ணாத பெரியபிராட்டியாரோடு உனதுதிவ்விய மங்களவிக்கிரகத்தை அகக்கண்களால் சேவித்தனுபவித்து அவ்வநுபவத்தைச் சாதுஜனங்களறிந்து உஜ்ஜீவிக்கும்படி பொய்கையாழ்வார் வையந்தகளியா வென்கிற முதல் திருவந்தாதியையும், பூதத்தாழ்வார் அன்பேதகளியா வென்கிற இரண்டாந் திருவந்தாதியையும், பேயாழ்வார் திருக்கண்டே னென்கிற மூன்றுந் திருவந்தாதியையும் திருவாய் மலர்ந்தருளக் கருணையுடன் அந்த மூவருடைய அருளிச்செயல்களையுங்கேட்டு, தாமரைபுஷ்பத்திலெழுந்தருளிய திருமங்கையார் திருமார்பில்விளங்க உலகத்தினதஜ்ஞானவிருள் நீங்கும்படி கோவலூராயனொன்று இடைகழியில் நின்றுய் எம்பிரானே-எ-று-

(நாற்)

வெயிற்காயு மாதித்தன் கனகத்தேர்க்கு- விடநாகம் வடஞ்சகடொன்றேழு
வாசி, சுயத்தா லராகாயத்திற் றோன்றடாத்தும்- சாரதிகா லிரண்டுமிலா மூட
வனுன்றன், மயத்தான்மா மேருவைத் தேர்சுற்றியாங்கு- மறைத்துதிப்ப
தேனினமா நின்வேதத்தின், இயற்சேரும் பிரமகற்பங்கிரானறன்னுள் - இதி
த்திருன்ற வைத்தனையே யெம்பிரானே. *

(இ-ள்-)வெயிலை விசுகின்ற சூரியனுடைய பொன்மயமாகிய தேர்க்குவி
ஷ்முள்ள சர்ப்பம்வடம், சக்கரம்ஒன்று, அதையிழுக்குங் குதிரைஏழு, வர்
தெதிர்க்கிற அசுரர்களை வெற்றிகொண்டு ஆகாயத்தில் அத்தேரை நடத்துகி
ற்சாரதி இரண்டுகாலு மில்லாத மூடவன், உன்னுடைய அருளால் மகமே
ருவை அந்தத் தேர்சுற்றுகையில்அங்கேமலறந்து உதயஞ் செய்வதேனின
மாகும், உன்னையே முதற்கடவுளெனப் பிரதிபாதிக்கின்ற வேதங்களிலும்
அவ்வேதத்தோடொத்த நூல்களிலும் சொல்லப்பட்ட பிரமகற்பமும், இ
ரகணமும், மற்றஞ்சுபதினங்களும் அத்தினங்களிலுலே உண்டாகும் பழி
கற்பித்து வைத்தாய் எம்பிரானே-எ-று- (ஈச)

உதித்துவரும்போது மத்தியானப் போதும்- உயரத்தமலைவாயில் புகும
ப்போதும், மறித்த சுரரருக்கனைத்தேர் நடத்தொட்டாமல்-வானந்துபோர
த்திருநாபிக் கமலம்வந்த, விதிக்கடவுளுதித்ததிருமந்திரத்தால்- விப்பிரர்
கள் யாவருமுச்சரித்தோறும், எதிர்த்திறைத்த நீர்க்கணையா லசுரர்கீழ்ப்பட்-
டெதிர்நடக்கப் பண்ணுகின்ற பெம்பிரானே. *

(இ-ள்)உதயஞ்செய்து வருகிறகாலத்திலும், மத்தியான காலத்திலும், அ
ஸ்தமனமலையில் சேருகிறகாலத்திலும், உபுத்தச் செருக்குக்கொண்டு அசுர
ர்கள் சூரியனைத் தேர்நடத்த வொட்டாமல் வானந்து போர்செய்யா நிற்க,
உன்னுடைய திருநாபிக்கமலத்தில் உதித்த பிரமதேவன் சொல்லியருளிய
நிறந்தமந்திரத்தினுல் பிராமணர்கள் யாவரும் மூன்றுசந்தி காலத்திலும்
எதிரேநின்று ரெண்டுகைகளினுலுட் இறைக்கின்ற நீராகிய அம்புகளினுலே
அத்தசுரர்கள் அபசயப் படச்சூரியன்தேர் நேராகப் போகச் செய்கின்
றாய் எம்பிரானே-எ-று- (ஈஉ)

திண்ணமுடன் பாண்டவக்குச்சாபமுற்றும்- திறற்றரும னுற்பவித்தா னெ
ன்றமட்டில், கண்ணிலாத் திரிதராட்டிரன் றன்றேவி- காந்தாரிகருப்பம் வி
ழுப் புடைத்துக் கொள்ள, மணிவிளக்கு - பொன்முழுமூனியாசன்-

வந்தெடுத்துப் பலகலசத்தடைத்திநின்பேர், எண்ணவது நூற்றுவராய்ப் பிறக்கச் செய்தாய்-இறைவா நாராயணனேயெம்பிரானே *

(இ-ள்) பாண்டுமகாராஜனுக்குக் கிந்தமனென்னும் முனிவரால் உறுதியான சாபம் சம்பவித்திருந்தும், பாவத்தை வெற்றி கொண்ட தருமராசன்பிறந்தானென்றுகேள்விப்பட்ட மாத்திரத்தில், பார்வையில்லாததிருதராட்டிரனுடையமனவியாகியகாந்தாரியின்வயிற்றிலுள்ளகருப்பமானது கலங்கிவிழும்படிக் கல்லாஸ்மோதியடித்துக்கொள்ள அதைவல்லகலங்கிவித்த கருப்பவுநிரமானது வீணேயழிந்து மீபாகாமல் நூறுகலசங்களிலும் மீதியை மற்றொருகலசத்திலும் அடைத்துவைத்து வியாசமுனிவர் உனது திருநாமத்தைத் தியானிக்க அந்தவுதிரம் துரியோதனன் முதலிய நூறுபேராகவும் துச்சனை யென்கிற ஒருபெண்ணாகவும் பிறக்கச் செய்தாய் எம்பிரானே-எ-று- (கூ)

விண்ணுலகு மண்ணுலகுமசுரர் மிஞ்சி- வேதமற்று வேள்வியற்று நீதியற்றுண், பெண்ணென்னுங்குலமிரண்டும் வரம்புகெட்டுப்- பிரமாவும் படைப்பொழிந் திட்டிருந்த நாளில், திண்ணமூடன் கருடவாகன மீதேறித்- திலசுரரனேவரையுங்கொன்றுதேவர், எண்ணவுலகோழும் படியச் செய்தாய்- இறைவா நாராயணனே யெம்பிரானே. *

(இ-ள்-)சுவர்க்கத்திலும் பூமியிலும் அவைதிக மார்க்காநு சாரர்களாகிய அசுரர்கள் பெருகிமிகுந்த கொடுமை செய்ததினாலே வேதபாராயணம் ஒழிந்து, உண்ணோக்குநித்துச் செய்யும் யாகங்கள் அற்றுப்போய், மநுநீதிபுறைகெட்டுப்புருஷீர்கள் ஸ்திரிகளென்கிற வரம்புகிறிது மில்லாமம் போக இவ்விபரீதத்தைக் கண்டு பிரமனும் சிருட்டித்தொழிலைநடத்தாமல் இருந்தநாளில் தர்மஸ்தாபநார்த்தமாகநீபெரியதிருவடிகளின் மேலேழுந்தருளி தேவர்முதலானோர்களை வெற்றி கொண்டிருந்த அசுரர்கள் யாவரையும், சங்கரித்துத்தேவர்கள்முதலானோர்கள்உண்ணத்தியானிக்கும்படிச்செய்தருளவுங்கூடியும் வேதநெறிப்படி அடங்கி நடக்கச் செய்தாய் இறைவனே எம்பிரானே-எ-று- (கூ)

வன்னியினன் பகழ்விசுவதேவன் சுத்த- வருணன் வயிஷ்ணவாரணிய னிந்திரன்சீர், நன்னெறிசேர் தேவமுனியேகபாதன்-நமன்வாயு வுமபிதிர்கடனாயகுபேரன், கொன்னமருஞ் சங்கரனுர் விநியாகென்னும்- குறைவிலா விவர்

கள்பதினேந்துபேரும், இன்னமுத மதிக்கலையைத் தினமொன்றாக- [என்று முன்னவைத்தனம்ய யெம்பிரானே, *

(இ-ள்)அக்கினி, சூரியன், புகழ்மிகுந்த விசுவதேவன், பரிசுத்த மாகியவருணன், வயிஷ்ணவன், இந்திரன், சிறந்தநன் நெறியைச்சேர்ந்த தேவமுனி, எகபாதன், [எமன், வாயு, உமை, பிதிர்தேவதைகள், தனத்தில்மிகுந்தகுபேரன், பெருமைதங்கிய சிவன், பிரமன் என்கின்ற குற்றமில்லாத இப்பதினேந்துபேரும்[இனிமையாகிய அமிர்த கிரணங்களையுடைய சந்திரனதுகலைகளைத் தினம்ஒன்றாக எந்நாளு முண்ணும்படிக் கற்பித் தாயே எம்பிரானே-எ-று- (ரூஅ)

முதற்பிறையா மென்னுமோர் கலையிற்கூடி- மூவைந்தும் வளர்ந்து கலைபதினாறும், மதிக்கலையிற் பதினேந்தைச் சாருண்டென்று- வந்திதனைக்கூடுமாவாசைநாளில், கதிர்ப்பரிதி பசும்பயிர் புல்கன்மரத்தில்- கலந்தணைந்தபசுவிடத்தேவந்துகூட, இதிற்பஞ்சகௌவியத் தாற்பணு மோமத்தால்-ஓதுதிக்கப் பண்ணுகின்றா யெம்பிரானே. *

இ-ள்- முதற் பிறையாகிய ஒருகலை யோடு கூடிப்பதினேந்துகலைகளும் வளர்ந்து கலைகள் பதினாறும், அச்சந்திரனது கலைகளிலே பதினேந்து கலைகளைத்தேவர்களுண்டி மீதியாயுள்ள கலையைச்சூரியன்வந்து சேருகின்ற அமாவாசைநாளில் கிரணவளப்பமுள்ள சூரியன் உண்கலையின மிர்தமானது அவனது கிரணத்தின் வழியாகப்பசுமையாகிய பயிர்,புல்,கல்-மரம் இவற்றில்கலந்து சேர்ந்துபசுக்களிடத்தே வந்துசேர-அப்பசுவினிடத்தே உண்டாகும்கோசலம்,கோமயம்,பால், தயிர், வெண்ணெய்ஆகியபஞ்சகௌவியத்தாலே செய்யும் ஓமாக்கினியால் மறுபடியும் சந்திரனுடைய கலைகள் நிரம்பக்கற்பிக்கின்றாய்எம்பிரானே-எ-று- (ரூக)

காமனுருவிலி புரவிகளிதேர் காற்றுக்- கடன்மூரசங்குயில்காளஞ் சேனாலி
ன்னர், மாமகரந் கொடிகரும்பு சிலைதாண்வண்டி-மலர்கணை களிவை கொண்
டேமதனுய் வீறிப்,பூமியுயர் வானமெங்குஞ் சஞ்சரித்துப்-பூங்கணை யெய்
ரான் பெண்ணைப் பொருத்திக் கூட்டி,ஏம நிறுத்தயன்படைப் பூமிவனுல்வரி
த்தித்-தேற்றமுறவைத்தனையேயெம்பிரானே *

(இ-ள்.) நீமனத்தில்ஜனிக்கச்செய்தம்மன்மதன்உருவமில்லாதவன், குதிரைகள்-கிளி-தேர்-தென்றற்காற்று, பேரி-கடல், காளம்-குயில்கள்-படை-மின்னல்போலு முருவமுள்ளமங்கையர்கள், கொடி-மகரமீன், வில்-கரும்பு, நாணி வண்டுகள், அம்பு:- காமனைமுதலியமலர்கள், இவைகளைக்கொண்டு மிகவும் செருக்குடையவனுகி விதிசிவாதி சமஸ்தசேதனர்களையும் தனது ஆணைக்குட்படுத்தித்திரிலோகத்திலும் சஞ்சரித்துப்பூவாகிய அம்புகளையெய்வதினால் ஆண்பெண்ணேடு புணரச்செய்யப்பொன்னிறமுள்ள பிரமனுடைய சிருட்டியும் இம்மன்மதலால் விருத்தியாகிப்பல்கும்படிகற்பித்தாய் எம்பிரானே-எ-று. (சய)

பட்டமற்றுப் பதினலாண்டடவியுற்றுப் - பத்தினியுஞ்சிறைபோய்ப் பின்னேனுநீயும், மட்டறவே சலித்திருக்கச் சுக்கிரீவன் - வந்துதவக்கவித்திரளாற் சேதுக்கட்டித், துட்டனெனும் ராவணனைக்கொன்றுதேவர் - தோத்திரிக்க வீடணற்குப்பட்டங்கட்டி, இட்டமுடனுலகாண்ட சீராமாவென்-றெண்ணவிரு ளறுக்கின்ரு யெம்பிரானே. *

(இ-ள்.) தேவர்களுடைய வேண்டுகோளால் பட்டாபிஷேகம் நீங்கிப்பதினுன்குவருஷம் ஆரணியத்தில் எழுந்தருளியிருந்து, கணப்பொழுதும் அகலகில்லாத மகேசுவரியாகிய சானகிபிராட்டியாரும் இலங்கா நகரத்தில்சிறையிருக்க, இளையபெருமாளும் நீயும் அதிவிசனத்துக்கிராந்தர்களாயிருக்கும்போது, சுக்கிரீவமகாராஜாவந்து உதவிசெய்ய வானரசேனைகளைக்கொண்டுசமுத்திரத்திலே திருவணைகட்டி, வேதபாகியாசார துஷ்டனுகிய ராவணனைச்சங்காரித்து எல்லாத்தேவர்களும் துதிசெய்ய ஸ்ரீவிபீஷணற்குப்பட்டங்கட்டி மீண்டு திருவயோத்தியாபுரி வந்துசேர்ந்து அன்போடுஉலகத்தையாண்ட சீராமாவென்று தியானிக்குமவர்களுடைய பிறவியிருளை நீக்கியருள்செய்கின்ரு ய் எம்பிரானே-எ-று. (சக)

மீதானமச்சகந்தி மகன்செத்தில்லாள் - வியாசமுனிக்குப் பெற்றபாண்டுதந்தை, மாதாக்கள்குந்தியு மத்திரையென்பாளும் - மந்திரத்தாலேவருக்கவராயும்பெற்ரூர், சூதாடிப்பொய்யுரைத்துக் குருவைக்கொன்ரூர் - துரோபதையே பஞ்சவர்க்குத் தேவியாளுள், ஈதாணப்பொருட்பாரதமாமென்றே - எண்ணவிரு ளறுக்கின்ரு யெம்பிரானே. *

(இ-ள்.)மிகுதியாகியபுலவநாற்றம் உடலில்வீசுகின்ற மச்சகந்தியினுடை யபுத்திரனாகிய விசித்திரவீரியனிறந்துபோகவே, சந்ததிவிர்த்தியாகும்ப டி அந்த அரசனுடைய மனையாள் அம்பாலிகை ஸ்ரீவியாசமுனிக்குப்பெற் றபாண்டுமகாராஜன் பிதா, மந்திரத்தாலே யமன், வாயு, இந்திரன், மருத்து வர்களிருவருமாகிய ஐவர்களுக்குந் தங்களாவலையும்பெற்ற குந்தியும் மாத் திரையும் தாய்மார்கள், இந்தப்பாண்டவர்களைவரும் துரியோதனதிகளும் குரூடியும், பொய்பேசியும், குருவாகியதுரோணனைக்கொலைசெய்தார்கள் திரௌபதையொருத்தியும் பாண்டவர்களைவருக்கும் தேவியாளுள், இந்தச் சரித்திரம் வேதப்பொருளோடொத்த பஞ்சமவேதமாகிய ஸ்ரீமகாபாரத மாமென்று பிராமணர் முதலியோர்பாராயணஞ்செய்து சிந்திக்க அவர்க ளுடைய அக்கியானந்தகாரத்தை ஒழிக்கின்றார் எம்பிரானே-எ-று. (சஉ)

தண்ணியொரு பாகவதன் வறுமைதன்னுல் - நாகரசன் பாற்சென்று நலிவு கூர, மண்ணிலவனிருபதாண்டினுக்குச் செல்லும் - மனைவர்த்திக்கீந்துபின் னும்வாவெல் லேறுசீ, கண்ணதனுற்கானகத்திற் பசித்தவேங்கை - கண்டவ னுங்கலங்கியந்தக் கலக்கந்தீர, எண்ணரியே யெனக்கேட்ட புலிக்குமுத்தி- நந்தனவேங் கடத்தரியே யெம்பிரானே. *

(இ-ள்.) ஒருபாகவதர் வறுமையடைந்து நாகராஜனிடத்தில் சென்றுதம துமெலிவுசொல்ல, பூமியையாளுகின்ற அந்தஅரசன் இருபதுவருஷித் துக்குப்போதுமான மனைவர்த்திச் செலவுக்குப்பொன்னைக்கொடுத்துச்செ லவழிந்தபின்னும் வாருங்கோளென்றுசொல்ல, அப்படியே அவர்சென்று பொன்செலவழிந்தபின் அரசனிடம் மீண்டுவரும்போது காட்டில்பசியோ டு தம்மெதிரே வருகின்ற வேங்கைப்புலியைத் தமதுகண்களாரக்கண்டு கல ங்கி அந்தக்கலக்கந்தீரும்படி, யாவரும் சிந்திக்கின்ற ஹரியேயென்று உச் சரிக்க அம்மந்திரத்தைக்கேட்டபுலிக்கும் ஸ்ரீவைகுந்தத்தைத் தந்தருளினு ப் திருமலையிலெழுந்தருளிய ஸ்ரீஹரியே எம்பிரானே-எ-று. (சஊ)

அறுசமயத் தறைகளுக்கு மிறைவனீயென் - றறியாமற் பாண்டியன்மூன் நருக்குத்துற்றப், பிறலரசன்பொற்கிழியை புயரக்கட்டி - விழப்பாடிக்கொ டுபோமின் பெரியோனென்ன, மறைகளொன்று மோதறியாப்பெரியாழ் வாரை - மாமறை நீயோதுவித்துக் கிழியறக்கண், டிறைவணங்கிப்பட்டர்பி ரான் வந்தானென்றே - எண்ணவிருளகத்தனையே யெம்பிரானே. *

(இ-ள்.) அறுசமயத் துறைகளுக்கும் நாதன் நீதானென்றறியாமல் பாண்டியராசன் முன்பலசமயிகளோடும் வாதுசெய்து பரப்பொருள் இன்னதெனவிளங்காமல், அந்தவெற்றியுள்ள பாண்டியன் பொற்கிழிலய உயரக்கட்டி, எந்தச்சமயக்கடவுள் பரம்பொருளோ அதை நிரூபித்து அக்கிழியறுத்துவிழப்பாடி அதனைக்கொண்டு போங்கோளென்று தெரிவிக்க, வேதங்களிலொன்றையும் ஓதவும் அறியாதபெரியாழ்வாருக்குச் சமஸ்தவேதாங்களையும் வேதார்த்தங்களையும் விளங்கச்செய்து நீபரம்பொருளாயிருக்கும்உண்மையை மற்றசமயிகளும் அறிந்து கொள்ளும்படி அப்பெரியாழ்வாராக்கொண்டு சொல்வித்துக்கிழியறச்செய்ய, அதுகண்டு பாண்டியன் நமஸ்காரஞ்செய்து பட்டர்பிரான் வந்தானென்று அவராஎண்ணிஉபசரிக்கஅவனுக்குப்பேதைமையிருளை நீக்கிஞ் எம்பிரானே-எ-று. (சச)

நந்தவனங் கொத்தநிலத் தெழுந்தபெண்ணை - நன்குவிண்டு சித்தரன்பாய் வளர்த்தநாளில், சிந்தைமகிழ்ந் தனக்காழ்வார் கட்டிவைத்த - திருமாலைய வள்சூடி நிழல்பார்த்தீய, உன்றனக்கு மற்புதமாத் தினமுஞ்சார்த்தி-உகந்து சூடிக்கொடுத்த நாச்சியாரென், நிந்நினைச்குமிது திட்டங்காட்டித்தொண்டர் - இருதயத்தி லிருக்கின்றபெம்பிரானே.

(இ-ள்.) நந்தவனத்தைக் கொத்தாநிற்கையில் அந்தநிலத்தில் அவதரித்த கோதையாரைப் பெரியாழ்வார் அன்போடு நன்றாக வளர்த்துவந்தநாளில் உள்ளன்போடு உனக்கு ஆழ்வாரானவர் கட்டிவைத்த திருமாலையை அந்தக் கோதையார் கண்ணுடி பார்த்துச்சூடி அழகமைந்த மாலைகளை உனக்குக் கொடுக்க, அந்தமாலைகளையே நீயும் அற்புதமாகச்சார்த்திக்திருவுளமுகந்து அக்கோதையாரைச் சூடிக்கொடுத்த நாச்சியாரென்று கூறிப்பெரியபிராட்டியாருக்கும் இந்த அன்பைத்தெரிவித்து மெய்யடியார்களுடைய இருதயத்தி லெழுந்தருளி யிருக்கின்றபெம்பிரானே-எ-று. (சடு)

மச்சகூர்ம வராகநாரசிங்க - வாமனமூவிராம புத்தகற்கியாம்பத், தச்சதவ தாரமாகுமென்றே - அகிலாண்டந் தெளியுமிவற்றிரண்டாம்ராமன், கைச்சமராடக் குறுகப்பரசுராமன் - கைச்சிலையை வாங்கியே நாரியேறிட், டிச்சகத்தி லெப்பொழுது மழுவாளன்றான் - இருக்குமுறை செய்திட்டா பெம்பிரானே.

(இ-ள்.) வேதங்களைக் கவர்ந்துகொண்டு கடலிலொளித்த சோமுகனைவதஞ் செய்ய மச்சமும், திருப்பாற்கடலைக் கடைந்தமந்தரமலையைத்தாங்கக்கூர மும், பூமியையெடுத்துச்சென்ற இரணியாட்சனைக் கொல்லப்புருஷவரா கமும், சர்வதேவர் வணக்கத்தலதியும் அவர்களுக்கு இறைவனுகிய உன்வண க்கத்தையும் விலக்கின இரணியனைக்கொல்லநரசிங்கமும், மாபலியினுடை ய கர்வத்தையடக்கவாமனமூர்த்தி, பரமவைதிகமார்க்கானுசாரிகளாகிய அந்த ணர்களை அவமதித்த அரசர்களைக்கொல்லப் பரசுராமனும், வேதநெறியிற்ற வறிநடந்து தேவர்முதலாலோர்க்கு இடுக்கண் செய்தராவணன் முதலிய இ ராக்கதர்களைக்கொல்ல ஸ்ரீராமனும், பிரலப்பன் முதலிய அசுரராம்சராசர் களைக் கொல்லப் பலபத்திரனும், உருத்திரன் நரிபுரத்தை அம்பாலெய் தெரித்து வெற்றிபெறும்படி அச்சங்கர பகவானுக்குத்தந்த வரத்தின்பொ ருட்டு அந்தத்திரிபுர அசுரர்களை வஞ்சிப்ப தற்காகப்புத்தனும், தயைசா ந்திமுதலிய நற்குணங்களைவிட்டு வேதங்களிடத்தில் அப்பிரமாணபுத்தி ப ண்ணிச்சதுர்வேதபிரதி பாத்தியபரஞ்சுடராகிய உன்னிடத்திலும்பரமவை திக மார்க்கத்தைப்பற்றி யொழுகுகின்ற உன்னடியார்களிடத்திலும் துவே ஷித்துத்திரியுமவர்களைச்சங்கரித்துத் தர்மஸ்தாபனஞ் செய்யும்பொருட்டு க்கற்கியுமாக அவதரித்த அவதாரம் பத்தென்று இவ்வண்டத்திலுள்ளோர்க ள் யாவர்களும் தெளிகின்ற இவற்றுள் உன்னுடைய ஆவேசாவதார மின்ன தென்று தெரிந்துகொள்ளும்படி இரண்டாம் ராமாவதாரமாகிய பரசுராம ன் வில்வித்தையில் தேர்ந்தகர்வத்தாலே போர்செய்யும்படி நெருங்கிவர அம்மழுவாளியினுடைய கைவில்லவனைத்த நாணேறிட்டு அவனுடையதவ த்தை அபகரித்து இந்தப்பூமியில் சிரஞ்சீவியாயிருக்கு முறையைச்செய் தாய் அச்சுதனே எம்பிரானே-எ-று. (சசு)

பிறக்குமுன்னே வயிற்றுக்குட் கருவிறந்து - பிணத்தைப் பெற்றழுதகிலர் புரளவைப்பாய், குறுக்குப்பட்டே வயிற்றிற்பிணமாவீங்கிக் - கூற்றவஞ்சி லதாயர்க் கொல்லச்செய்வாய், இறக்கமற்று மகட்பெற்று முன்னஞ்சி ய்த - இருவினையு மனுபவித்திட்டிறக்கச்செய்வாய், இறக்குமிடர்பிறக்கு மிடரிரண்டும் வேண்டேன் - இனிக்காமையேற் றச்சுதவென்னவெம்பிரானே. *

(இ-ள்.) பிறப்பதற்குமுன்னே வயிற்றிலேதானே கருவானது இறந்துஅ ப்பிணத்தைப்பெற்றுச் சிலர்புரண்டழும்படி வைப்பாய், சிசுக்கள் குறுக் காகக்கிடந்து வயிற்றிலேயே பிணமாகப்பெருத்து யமனுகி நின்றுசிலதாய் மார்களைக்கொல்லும்படிசெய்வாய் இப்படியிறவாமல்பிள்ளைகளைப்பெற்று

மூன்செய்ய இருவினைப் பயன்களாகிய சுகதுக்கங்களை அனுபவித்து இ
றக்கும்படி செய்வாய், மரணதுக்கத்தையும் சனனதுக்கத்தையும் வேண்ட
மாட்டேன் இனிப்பிறவிக்கடலினின்றும் கரையேற்று அச்சுதனே - எம்பிரா
னே-எ-று. (சஎ)

ஆவணிரோகிணி நாளில பரபக்கத் - தட்டமியிற்சசியுதிக்கும்வேளைதன்னி
ல், தேவர்தொழவடமதுராபுரியிற் ரோன்றிச் - சிசுவடிவாய் வசுதேவன்
கைம்மீதேறி, நீவரலுஞ் சயந்திநாள் வனத்துக்காளி - நேயமுடன் கனிக
டரவுகந்துகொண்டே, யாவருக்குமரியபதங்காளிக்கீந்தாய்-இறைவாதாரா
யணனேயெம்பிரானே. *

(இ-ள்.) ஆவணிமாதத்துஉரோகிணித்திருநட்சத்திரங் கூடியஅபரபட்ச
த்து அஷ்டமிதிதியில் சந்திரோதயகாலத்தில் பிரமருத்திரேந்திராதிதேவர்
கள் உனது சௌலப்பியகுணத்தைத் துதிசெய்து வணங்கவடமதுரா புரி
யில்திருவவதரித்து ஸ்ரீ வசுதேவருடைய கைகளின் மேல் சிசுரூபமாக எ
ழுந்தருளி நீ வருதலும், அந்த ஸ்ரீ சயந்திநாளில், அவ்வழியிலுள்ள வனத்
துக்காளி தேவியானவள் - அதிபக்தியோடு நல்ல மதுரகனிகளை உனக்குச்
சமர்ப்பிக்க நீயும் அக்கனிகளை உகந்தருளி எவர்களுக்கும் பெறுதலரியபத
த்தை அந்தக்காளிக்குத்தந்தருளினாய் எம்பிரானே-எ-று. (சஅ)

அரிதிவசமாமேகாதசிநன்னாளை - அநுஷ்டித்தருக்கு மாங்கதனைக்கண்டவ்,
விரதமனுஷ்டித்தளவிலாதபேர்கள் - மிக்ககதிசெருகையாற்சுரர்சோதிக்க,
உருவமிகுமோகினியைவிடுத்தமட்டில் - உறுதியாத்தன்மகனைவெட்டுங்கூ
ர்வாள், இருபுயத்திற்பூண்தொடையாவிழவைகுந்தத் - தினத்தோடும்வைத்
தனையே யெம்பிரானே. *

(இ-ள்.) அரிதிவசமென்றுசொல்லும் ஏகாதசியாகிய நல்லநாள் விரதத்
தை அனுஷ்டித்து வந்தருக்கு மாங்கத மகாராசனுடைய விரதசீலத்தைக்
கண்டு அளவில்லாத சாது ஜனங்கள் தாங்களும் அரிவாசரவிரதத்தை அநு
ஷ்டித்து எல்லாவுலகங்களிலும் மேற்பட்டதாகிய ஸ்ரீ வைகுந்தத்தைச் சே
ர்வதினும்ல அந்தருக்குமாங்கத மகாராசனுடைய விரதநிச்சயத்தைச்சோ
திக்கும்படி தேவர்கள் அழகுமிகுந்தமோகினியை அவர் பக்கல் விடுக்க, அ

வள் அவனை அடுத்துப் புணர்ந்து சுகித்திருக்கும் நாள்களில் ஒருநாள் அந்த அரசன் அவளோடு விநோதமாகச் சரசவார்த்தை யாடிக்கொண்டிருந்தனர், அது சமயத்தில் எகாதசி சுதினமென்று வழக்கப்படிவள்ளுவர்முரடிக்க அவ்வொலியைக்கேட்டு - ஓ கோ - இதென்ன, அபசார மென்று எழுந்திருக்க, அவள்அவனைக் கரத்தைப் பிடித்துக் கொண்டுஇன்று எல்லையேயேவேண்டு மென்றனள், மனங்கலங்கிஅரசன்உனக்கு வேண்டியபொன்னிலம்முதலியவற்றைக் கொடுக்கிறே னென்றுசொல்லவும் இணங்காமல், உனதுபட்டத்துக்குரியகுமாரனை வெட்டுவாயாகில் நான்சம்மதிப்பே னென்றனள், அப்படியே பரமபகவானுடைய அரசர்தமதுகனை நிற்கச்செய்து வாள்கொண்டு வீசுதலும் அதுபூமாலை போலஅச்சிறுவன் கழுத்தில்விழச் செய்து நீபெரியதிருவடிகளின் மேலெழுந்தருளிச் சேவைசாதித்து ஸ்ரீருக்குமாங்கதரோடு அங்குள்ளசாது சனங்கள்யாவர் களையும் ஸ்ரீவைகுந்தத்தையடையச் செய்தருளினாய் எம்பிரானே -எ-று- (சகூ)

பத்தியுடன் துவாதசியன் றம்பரீடன் - பாரணைசெய்வது தவிர்ப்பான் துருவாசன், குத்திரமாவந் தொளிக்கவுண்ண வஞ்சித் - தோவிந்தாவென்றனதுதோத்தங் கொண்டான், உத்தமனென்றெண்ணுமற் கிருத்தியேவ - உயர்மூனியத்துரந்தண்டத்துறவொட்டாமல், இத்தலத்திலம்பரிட நீயேகாவென் - றிரந்தடையப்பண்ணினையே யெம்பிரானே. *

(இ-ள்.) அம்பரீஷனென்னும் ராஜரிஷி யானவர்பக்தியோடுதுவாதசியினன்றுபாரணைசெய்யும் விரதத்தைத் தவிர்க்குப்படி துருவாசமுனி அவர்பக்கல் வஞ்சனையாக வந்து இன்று உன்னையில் பிட்சைக்கு வருவோமென்றுசொல்லிப்போ யொளித்திருந்த, அந்த ராஜரிஷியானவர் - பாரணைப்பொழுது போகிறதேமேலும் அதிதியு மில்லாமல் உண்ணலாகாதேயென்றுகிலேசங்கொண்டு உண்ணப்பயந்து கோவிந்தா வென்றுபாரணைப்பொழுது தவறாமல் உன்னுடைய தீர்த்தம் உட்கொண்டு அம்முனியின் வரவுக்காக எதிர்பார்த்திருந்தனர், உடனே துருவாசமுனி வந்து, தீர்த்தப்பிரசாதங்கொண்டது உத்தமமென்று எண்ணாமல் அதிகோபிஷ்டராய்த்தமதுசடையிலொன்றைப் பறித்து எறிய அதில் நின்றும் ஒரு பூதம்புறப்பட்டு அப்பரீஷிமுனிவர் பக்கல் செல்ல, அவர்கரங்களைகுவித்துக்கொண்டுஉமக்குச்சரணாகதிசெய்து கொண்டுநிற்க, பக்தவத்சலனாகிய நீ ஸ்ரீ சுதரிசனப்பிரானேயே, அவ்வாயுத ராஜனுவர் தமது சுவாலையாலே பூதத்தைச் சாம்பரா யெரித்து விட்டுத் துருவாசமுனிமேல் சென்றுதரத்தியருள, அ

ம்முனியும் சத்தியலோகம் சிவலோகம் இந்திரலோக முதலிய இறை யவர் பதங்களிலும் சென்று தன்னைக்காப்பாரில்லாமையைக்கண்டு ஸ்ரீ வைகுந் தத்தில் உன்னையும் சரணகதஞ்செய்ய, அடியார்கள் பக்கல் செய்தகுற்றத் தை அடியார்களே கூமிப்பார்கள் நம்மாலாகா தென்ன, விளாந்தோடிவ ந்து இப்பூமியில் அம்பரீஷமுனிவரோ நீரே என்னைக்காக்கவேண்டுமென்று யாசித்து அடைக்கலம்புகச்செய்தாய் எம்பிரானே-எ-று. (நல)

பாதகண்டா கன்ன னெனுமரக்கன் - பத்தியற்றுன் பெரும்பு கழைக்கே ளேனென்று, காதிரண்டிற் சத்தமிகுமணியைக் கட்டிக் - கனப்பொழுது மோயாமலசைத்திருக்கத், தீதுநினைந்தானென்றுன் மனத்தெண்ணமல்-சி ந்தையினன் மறவாமற்றியானித்தானென், றே மறவனுக்குமவன்றம்பி க்கும் - இரங்கிமுத்தியளித்தனையே யெம்பிரானே. *

(இ-ள்.) பாதகனுகியகண்டா கர்ணனென்னும் இராட்சதன் முதற்கடவு ளாகிய உன்னிடத்தில் பத்தியில்லாதவனுகி உனது பெருமையாகிய கீர்த்தி யைக் கேளே னென்று தன காதிரண்டு காதிலும் மிகுந்த ஒலியையுண்டாக்கா நின்றமணிகளைக் கட்டி ஒரு கூணப்பொழுது மோயாமல் - அசைத்துக் கொண்டு, சிவன் பால் பத்தி செய்து வருகிற நாளில் ஒரு நாள், கைலாய த்துக்குப்போய் ஓ சிவமூர்த்தியே எனக்கு அழியா முத்திதரவேண்டு மென் று கேட்க, அந்தஉமைசர் மீளாக்கதி ஒன்று தவிரமற்றெந்தப்பதவிகளை யாவது ஐசுவரியங்களை யாவது கொடுக்க என்னுலாகும் நித்திய வின்பத்த தாகிய மோட்சம் வேண்டுமேயானுல், ஸ்ரீ சர்வேசுரனைதரவேண்டுமென்று சொல்லுதலும், காதுகளிற்கட்டியிருந்தமணிகளை - எறிந்துவிட்டு உன் னைச்சரணகதிசெய்ய, நீ நம்முடைய திரு நாமத்தையுங் கேளாதவனென் றுகுற்றமாகத்திருவுளத்தே நினையாமல் துவேஷித்திலாவது சிறிதுபொ ழுதும் மறவாமல் தியானித்தானென்றகருணைசுரந்து, முன்செய்தபிரமக த்தியாதிபாவங்களையும்ஒழித்துஅந்தக்கண்டாகர்ணனுக்கும் அவன்தமிமா னம் பெற்ற அவன்றம்பிக்கும் ஸ்ரீ வைகுந்தத்தை - அருள்செய்தாயே எ ம்பிரானே-எ-று. (நக)

கடிக்கினிரதித்தமாங்கனியைமீளக் - கடியாமற்கல்லியில்வைத்தனக்காகொ ன்றே, படைத்துவைத்தவேடுவச்சிசபரிநெஞ்சில் - பரிவுகண்டுரகுரா வசாரத்தில், சடக்கெனவேமுன்நின்றகனியைத்தானே - தீக்கவிதிப்படி

டைத்ததாகவுட்கொண், டிடுக்கணறச்சாரூபஞ்சபரிக்கீந்தாங் - கிடேற்றிவி
ட்டனையே யெம்பிரானே. *

(இ-ள்.) கடித்துருசி பார்க்கையில் மதுரமாயுள்ள மாங்கனியை மருபடி
யுங்கடியாமல் உனக்குபோக்கிய மாருமென்று இவ்விப்பாத்திரத்தில் வைத்
துநிவேதனஞ் செய்து வைத்தவேடுவச்சி யாகிய சபரியினது உள்ளன்பை
க்கண்டு, சிராமாவதாரத்தில் - அச்சபரிமுன் கடித்தெச்சிற் பட்ட கனிகளை
வேத மூலின் விதிப்படி நிவேதனஞ்செய்த நிவேதனம்போல அதிவிசா
வாக அமுது செய்து அவளுடைய பிறவித் துன்பங்கள் நீக்கும்படிமீளா
க்கதியை அவளுக்கு அங்குதானேதந்தருளினாய் எம்பிரானே-எ-று. ()

திண்ணமுடன்கோபாலர்மனையில்வெண்ணெய் - திருடினதைக்கண்டவர்க
ரத்தும்போது, கண்ணில்லாத்தநிபாண்டன் மனையிற்புக்குக் - கண்கொ
டுத்தோர் சாடியிற்போந்தொளித்துக்கொள்ளப், புண்ணிகராங்கண்வெண்
டேன் கதிதாடல்லால் - போகவிடேனெனச்சாடி மூடிக்கொள்ள, எண்ண
ரியபரமபதமவனுக்கீந்தாய் - இறைவா நாராயணனே யெம்பிரானே. *

(இ-ள்) அச்சமில்லாமல் ஆயர்களுடைய திருமாளிகைகளில் நீ வெண்
ணெயைக் களவு செய்ததைக்கண்டு அவர்கள் உன்னைத் தரத்தும் போது,
தநிபாண்டனுடைய திருமாளிகையிலே ஒரு பெருஞ்சாடியில் புகுந்து உ
ன்னுடைய நிவ்வியமங்களவிக்கிரக ஸ்வரூப சௌந்தரியத்தைச் சேவிக்கு
ம்படி அவனுக்கு நேத்திரங்களைக் கொடுத்து ஒளித்துக்கொள்ள, ஸ்ரீ கண்
ணபிரானே இதுவரையில் உன்னைக்காணப்பெறுமையால் புண்ணுக் கொப்
பாகிய இந்தமாமிச சட்சுகள் எனக்குவேண்டியதில்லை, எனக்கு மீளாக்கதி
யைத்தா அல்லாவிடில் உன்னை இந்தச் சாடியினின்றும் புறத்தே போகவி
டேனென்று சொல்லிச்சாடியின் வாயை மூடிக்கொள்ள, சர்வபரிபூரண
னுகிய நீ வெளியே வரச்சக்தியில்லாரைப்போல அதிலே அடங்கி நின்று
அந்தநிபாண்டனுக்கும் - அத்தயிர்த்தாழிக்கும் சிந்தைக்கும் மொழிக்கும்
எட்டப் படாதபரமபதத்தை அங்கே தந்தருளினாய் எம்பிரானே-எ-று. ()

மிடித்தில்லாள் பசித்தொறக்கக்குசேலனென்னும் - விப்பிரன்முனஞ்சியு
ன்றன் பதிக்குண்மேவ, அடித்தநிநேகன்வந்தானென்றேசிந்தித் - தறிந்த
மைதென்கொவேந்தாய் சிருதியென்ன, மடிக்கணுறு பொர்யவலா மத

னநோக்கி - மகிழ்ந்து விரலாலள்ளி யிருகாலுட்கொண், டிடுக்கணறச்சம் பத்து முத்திவிடும் - இரங்கியவற்களித்தனையே யெம்பிரானே. *

(இ-ள்.) பெண்சாதியானவள் அதிகதாரித்திரியத்தினுல் உணவில்லாமல் நொந்து வெறுத்துக்கொண்ட தன்மேல், அதற்குப் பயந்து குசேல னென்னும் பிராமணன் நீ எழுந்தருளியிருக்கும் துவாரகாநகரத்துக்குவரவே இவன் நெருங்கிய சிநேகன் நம்மிடமே வந்தானென்று எண்ணி அர்க்கபாத்திய முதலிய உபசாரங்களைச்செய்து அழைத்து வந்து ஓராசனத்தில் இருக்கச் செய்து, சர்வக்கியஞ்ஞ நீ அவ்வேதியனைக் கடாட்சித்து என்ன கொண்டுவந்தாய் எனக்குத்தாவென்றுகேட்டு அவன் மடியிலிருந்தபொரி யவலைப் பார்த்துக்களித்துவிரல்களாலள்ளி இரண்டுமுறை அமுது செய்து இம்மையில் அவனது தரித்திரவியாதியறச் சம்பத்தையும் மறுமையில் சனனவியாதியறப் பரமபதத்தையுந்திருவுளமிரங்கி அக்குசேலனுக்குத்த ந்தருளினுய் எம்பிரானே-எ-று. (நுச)

நந்தகோபன்வாழ்ந்திருவாய்ப்பாடி- நகரீமீது படையெடுத்துமண்டலி கரி, வந்திடினப்பகைவ ரெல்லாமடிவ ரென்றே - வரங்கொடுத்துப்பின்ன ரங்கற்பித்தாயால், அந்தவரத்தாற் கஞ்சன்வரவே யஞ்சி - அசுரர்களிற்ப லரை விடுத்துன்னைக் கொல்லற், கெந்தவகை தொடுத்தாலுஞ் சயித்தநே ச-விராக்கதரை வதைத்தனையே யெம்பிரானே. *

(இ-ள்.) சீர்நந்தகோபன் வாழ்கின்ற திருவாய்ப்பாடி நகரத்தின் மேல் அசுராம்சராசர்கள் படையெடுத்து வந்தால்இனிமடிவார்க ளென்றுவரத் தைத் தயைசெய்துபிறகு ஒருதிருவாய்ப்பாடியை நூதனமாகக்கற்பித்து வைத்தாய், அந்தவரத்தினுல்கஞ்சனவன்திருவாய்ப்பாடிக்கு வரப்பய ந்துதன் தன்மதியினுல் பலஅசுரர்களைஅனுப்பின்னைக்கொல்லுதற்குஎந் தவகைசெய்த போதினும்வந்த அசுரர்களையும் இராக்கதர்களையும் வதைத் தாய்எம்பிரானே-எ-று. (நுஎ)

உக்கிரசேனன்றனைப்போல்வடிவுகொண்டே - உத்தமியையோரசுரன்வந் தகூட, அக்கிரமக் கஞ்சனுதித்தசுரஞ்சி - அசுரரைக் கூட்டிக்கொண்டேபி தாவைத்தள்ளித், திக்கெல்லா மவனுள மதுராக்கேகித் - திருடனேகஞ்ச

னைக்கொன்றவன் பிதாவை, இக்குவலயம்புரக்கப் பண்ணுவித்தாய் - இறை
வாநாராயணனே யெம்பிரானே, *

(இள்) உக்கிரசேன மகாராசனைப்போல உருவங்கொண்டு ஓரசுரனவ
ன்உத்தமிபாகியஅவர்பெண் சாதியைப்புனர்ந்துசுகத்தை யனுபவித்துப்
போக, அதுகாரணமாக அக்கிரமமுள்ளகஞ்சன்பிறந்து அசுரச்செய்கை
யையுடையவனுகி அசுரர்களைச் சிநேகங்கொண்டு சிங்காதனத் தினின்றும்
பிதாவை நீக்கித்தானேயிட்டுச்சிறைப்படுத்தி எல்லாத்தேயங்களையும் ஆண்டு
கொண்டிருக்கும்முறையில்லாமையைத் தர்மஸ்தாபனர்த்தமாகஅவதரித்
தநீயறிந்து,வடமதுராபுரிக்குப்போய்க்கஞ்சனையும்அவனுக்குச்சகாயபூத
ர்களாய் வந்தவர்களையும் கொலைபுரிந்து அவன்பிதாவாகிய உக்கிரசேனம
காராசனுக்குப்பட்டங்கட்டி இந்தப்பூமண்டலத்தை யாளும்படிசெய்வித்
தாய்எம்பிரானே-எ-று. (இரு)

நின்னினைவானித்திரையைத் தூர்க்கையாக்கி - நிகரினந்த கோபனுக்குத் தூ
நலையாக்கி, அந்நிசியினியுதித்து மயங்கப்பண்ணி - அருளுடனே வசுதே
வன்கைப்பீதேறி, நன்னெறிசேர்திருவாயர்பாடிபுக்கு - நந்தனுக்குமகவா
னதூர்க்கைப்பெண்ணே, இன்னிசையிற்றேவகியார் பெற்றுரொன்றே - இனி
தாலாக்கப்பண்ணினையேயெம்பிரானே, *

(இ-ள்-) உனதுசங்கற்பத்தினுல்நித்திராதேவியைத் தூர்க்கையாகச்சிருட்
டித்து ஒப்பில்லாதஸ்ரீநந்தகோபருக்குப்புத்திரியாகப் பிறக்கச்செய்துஅ
ந்தராத்திரியில்நீஅவதரித்துஎல்லாச்சேதனர்களையும்மயங்கச்செய்துமிகு
ந்தகருணையோடு ஸ்ரீவசுதேவருடையதிருக்கரங்களின்மே லெழுந்தருளிந
லலொழுக்கம் அமைந்ததிருவாய்ப்பாடியிற்புகுந்து, ஸ்ரீநந்தகோபருக்
குப்புத்திரியாகப் பிறந்திருக்கும் தூர்க்காதேவியை இனிமையானகீர்த்
தியையுடைய ஸ்ரீதேவகிபிராட்டியார் பெற்றுரொன்று வடமதுரையிலுள்
ளோர்கள் நன்றுய்ச்சொல்லும் படி செய்வித்தாய் எம்பிரானே - எ-று.)

கடியகாத்த பாசுரனுஞ்சத்தமாகக்-கத்துவதுகேட்டளவிற்கஞ்சனுங்கிட்,
படையெடுத்துக்கவசந்தொட்டநேகமோடும்- பதலமாய் வந்திடத்தேவ
கியார்கண்டே, திடமுடையாணன்று பெண்ணேயென்றபோதும் - சீக்
கிரமாக்கல்லிலடித்திடவேயோங்க ,இடியிடித்தாப் போல்மார்பிலுதை
த்தேதுர்க்கை- ஏகினைத்தருளினையேயெம்பிரானே *

(இ-ள்-) குரூரமனமுள்ளகர்த்தபாசுரனும் பேரோசை யாகக்கத்துவ
தைக்கேட்ட மாத்திரத்தில் கஞ்சனுனவன் அதிபயங் கொண்டுகையில் வா
ளேப்பிடித்துக் கவசத்தைப் பூட்டிஅநேக அசுரரோடு சாக்கிரு தையாகக்
காராகிருகத் தண்டவர,கண்ட ஸ்ரீ தேவகிபிராட்டியார்மனுதரியமு
ள்ளஆண்பிள்ளை யல்லபிறந்தது பெண்பிள்ளையே யென்று சொல்லும்
போதும் சிறிதும் இரக்கமில்லாமல்சிக்கிரமாகவாங்கிக்கல்லின் மேல்அறை
யும்படி இரண்டுகாலையும்பிடித்துக்கொண்டு ஒங்கியபோது,அவன்கையிலு
ள்ளதுர்க்கா தேவியானவள் இடியிடித்தாப்போல அந்தக்கொடி யோனு
டையமார்பில் உதைத்துவிட்டு அந்தரமார்க்கத்தில் நின்று,உன்னைக்கொல்
லவந்து அவதரித்தபரம் பொருளானவன் ஆடர் பாடியில்வளர்கின்றனென்
றுதெரிவித்துப் போகத்திருவுளங்கொண்டாய்எம்பிரானே-எ-று(நிச)

மூலையில்விடமருத்தியுனைக்கொல்லவெண்ணி - மோகினியாய்வந்தபூதகி
யென்பாளோர்,மலையனவிழ்ந்திடமுலையினஞ்சும்பாலும்-வல்லியிருந்
திருப்பவள வயாவுண்டே, கொலைசெய்ய வந்தவடன்பகை யெண்ணும
ல்-கொடுத்தனைசாயுச்சி யவிடென்னிற்போற்றும்,இலகியமெய்த்தொண்
டருள்ளத்திதானீவ- தெளிதனக்குச்சீரியே யெம்பிரானே *

(இ-ள்.) கஞ்சனுடைய கட்டளையாலேதனதிரண்டு முலைகளிலும் தடவி
யவிஷத்தை உண்பித்து உன்னைக் கொல்லநினைத்து, யாவரும் விரும்பத்த
க்கஉருவமுடைய வளாகிஸ்ரீயசோதா பிராட்டியா ருடைய திருமாளிகை
யில்வந்துஉனக்கு முலைகொடுக்க,உலகமுண்ட திருப்பவளவாயால் தடவி
வந்தவிஷத்தையும் முலைப்பாலையும் அவளுடைய வலிய உயிரையும் ஒரு
சேரவுறிஞ்சியுண்டு, உன்னைக்கொலைசெய்யக் கருதிவந்த அந்தப்பூதகியி
னுடையபகைமையைப்பாராட்டாமல்ஸ்ரீவைகுந்தத்தைக்கொடுத்தா யெ
ன்றுல்உனதுகலியாண குணங்களை அநுபவிக்கும் ஞானமுடைய நிஜ
பக்தர்களுக்குப்பரமபதத்தைக்கொடுப்பது உனக்குஎளிதாயிருக்கும் அ
நந்தகலியாணகுணநிலயமாகிய ஸ்ரீஹரியேஎம்பிரானே-எ-று- (இசு)

குறைச் சலமக்கனிக்காகி யள்ளிமூடிக் - குதித்துவரமோதி ரத்தின்வழியா
றசிந்தி, முறத்திலிட வெறுங்கையாய்த் திகைத்துநிற்க - முகம்பார்த்துத்
தீங்கனிகொளப்பாவென்ன, நிறத்தநவமணிகள்கனிவிற்பாள்கூடை-நிறை
யவளஞ்சிநந்தகோபனென்னும், இறைக்குரைக்கவுனது சொம்மேகொ
டுபோவம்மா- என்றுரைக்கப்பண்ணினையே யெம்பிரானே *

(இ-ள்.) கனிவாங்கும்பொருட்டுத்திருக்கரம்பனரிசியை அள்ளிமுடிக்கொண்டுகுசலத்தோடுகுறித்தஅடிவரவேவிரலிலணிந்தமோதிரத்தின் வழியாலேஅந்தஅரிசிஎல்லாம்சிந்திப்போக, அதுதெரியாதவனைப்போல மூடியதிருக்கையை அங்காடிக்காரியினுடைய முச்சிலில்விரித்துவெறுங் கையையுடையாயாகித்திகைத்துநிற்க, பழம்விற்பவள் உனதுதிருமுகத்தைப்பார்த்துஎன்னப்பனேமாதரியகனிகளேஉனக்கு வேண்டியமட்டும்வாரிக்கொள்ளென்று சொல்ல அவளுடையபிரியாகிய வார்த்தையின்படி உனதுஸ்ரீஹஸ்தத்தால் வாரிக்கொள்ளுதலும், கனிவிற்பவளுடைய கூடையில நிரப்பியுள்ள கனிகள்யாவும் நவரத்தினங்களாகிவிடவே அவள்பயந்து திருவாய்ப்பாடிஅரசராகிய ஸ்ரீநந்தகோபருக்கு இச்செய்தியைத்தெரிவிக்க, அவர் இந்த ரத்தினங்கள் உனதுசொத்தே, அம்மாநீயே கொண்டு போவென்று சொல்லும்படி திருவிளையாட்டுச் செய்தாயே எம்பிரானே - எ - று. (கூல)

மன்னனைப்பாடாமற்போகின்றேநீயும் - வாவரியேவென்றழைத்தபுல்வன்பின்னே, பன்னகப்பாம்பணைசுருட்டிக்கொண்டேயேகிப்படுத்துக்கொள்ளென்றமட்டிற்படுத்துக்கொண்டாய், சொன்னவண்ணஞ்செய்தபெருமாளாமென்று - சுரர்துதிக்கக்கச்சியினிலிருக்கின்றாயால, என்னுயிருமென்னுணர்வுமெல்லாநீயே - இறைவாநாராயணனேயெம்பிரானே *

(இ-ள்-)காஞ்சிமண்டலத்தரசனைப்பாடாமல் என்னைச்சார்ந்திருக்கும்கணிகண்ணன் போகின்றான்நானும்அவனோடுபோகின்றேன் ஸ்ரீஹரியேநீயும் எம்மோடுவாவென்ற பொருளமைந்த "கணிகண்ணன் போகின்றான்காமருபூங்கச்சி - மணிவண்ணநீயிருத்தல்வேண்டா- துணிவொன்றிச்செந்தாப்புலவனிதோசெல்கின்றேனீயுநின்-பைந்நாகப்பாய்சுருட்டிக்கொள்,என்னும் பாடலைச்சொல்லித் திருமழிசைப்பிரான் அழைக்கஅவர்பின்னேநீசேஷசயனத்தைச் சுருட்டிக்கொண்டு சென்றுஅவர் ஓரிடத்தைக்குறித்துக்காட்டிச் சயனித்துக்கொள்ளென்றுசொன்னமட்டிலே சயனித்துக் கொண்டாய், இதுகாரணத்தாலே. வடமொழியில்யதோத்காரியென்றும் தென்மொழியில் சொன்னவண்ணஞ் செய்தபெருமாளென்றும் தேவர்கள்யாவரும் துதிக்கும்படி திருக்காஞ்சீபுரத்திலெழுந்தருளியிருக்கின்றாய்என்னுடையஉயிருட், என்னுடைய ஞானமும், என்னுடைய செய்கையுமாகிய இவையெல்லாம் நீயேயாம், எல்லாப்பொருள்களுக்கும் தலைவனேஎம்பிரானே-எ-று. (கூக)

அருதலர்க்குத் தோலா தவரந்தால் வந்த-காலயவதன் போரிற் பின்னிட்
போடி, வளாமுழையிற்றனையுறக்கமெழுப்பும்பேர்கள்-மடிவனென்றேமு
சுகுந்தன்வரத்தாற்றுஞ்சும், பரிமளிக்குமிடத் தொளிக்கத்தயிலுவானே
ப்-பதறிநீயென்றுதைக்க முசுகுந்தக்கோன், இருகண்விழித்திடக்காலய
வதனீரூய்-இறக்கவகையிட்டனையே யெம்பிரானே. *

(இ-ள்-) சத்துருக்களுக்குத் தோற்காதவரம் பெற்றுவந்தகாலயவதனரு
க்குப்போரில் தோற்றவனைப் போலநீகபடமாகநடித்துஓட்டங்காட்டிமை
யினது குகையில்தன்னைத்தூக்க மெழுப்புவோர்கள் சாவார்களென்று
தேவர்கள்பால்வரம்பெற்று முசுகுந்த சக்கரவர்த்தி நித்திரிக்கின்ற தேன்
பரிமளிக்கும்இடத்திற்போயொளித்துக்கொள்ளவே, உன்னைப்பின்தொ
டர்ந்து வந்தகாலயவதன் அந்தமுசுகுந்தசக்கரவர்த்தியைநீயென்றுநினை
த்து ஆதரப்பட்டு உலுத்தபோது அவர் இருவிழிகளையும் விழித்துப்பார்
க்க, எதிரேநின்றஅவன்சாம்பராகி இறக்குமுறைமையைச்செய்தாய்எம்பி
ரானே-எ-று. (கூஉ)

சயிந்தவனையிப்பகலே கொல்வேன்றப்பின் - தழலிறப்பேனென விசய
ன்சபதங்கூறட, பயந்தவன்பேழைக்குளுறச்சக்கரத்தால் - பகலைமறைத்
திரவாக்கித்தருமன்சேனை, மயக்கியிடச்சயிந்தவனுமொளிப்புநீங்கி-வரவி
ரலவப்பகலாக்கிவிசயாவெப்பெங், நியம்பியந்தச்சயிந்தவனைவதைத்து
ப்பார்த்தன்-இறவாமற்காத்தனையே யெம்பிரானே *

(இ-ள்.) அபிமன்னுவைக்கொலைசெய்த சயிந்தவனை இன்றுபொழுது
போகுமுன்னேகொல்வேன்இச்சொல்தப்புமேயானால் தீயில் விழுந்திற
ப்பேனென்று அருச்சுனன்சபதஞ்செய்ததைஅச்சயிந்தவன்கேள்வியுற்
றுப்பயந்து ஒருபெரும்பேழையில் ஒளித்துக்கொள்ளவே, முற்றுமுண
ரவல்லநீகோடிசூரியபிரகாசமுள்ளசுதரிசனமூர்த்திக்கு ஒளிமழுங்கச்செ
ய்தி, அம்மூர்த்தியினுல்சூரியனைமறைத்து இராவையுண்டாக்க இனிஅருச்
சுனன் தீயில்விழுந்து இறப்பானென்அதனுல்மற்றபாண்டவர்களும் இறப்பா
ரென்றுநருமநந்தனருடைய சேனையங்கிக்கொண்டிருக்கையில்அரு
ச்சுனன் தீப்பாய்வதைப்பார்க்கும்படி ஒளிப்பிடத்தைவிட்டுச் சயிந்தவ
னும்மற்றதிரியோதனாதியர்களும் வந்துநிற்ப, உடனேசக்கரப்பிரானை

ழைப்பித்து இராவைப் பகலாகச்செய்து, அருச்சுனனே சயித்தவன்மேல் பாணம்பிரயோகஞ்செய்யென்றுசொல்லிச்சயித்தவனைக்கொல்வித்து, அருச்சுனனிறவாமற்காத்தாய் எம்பிரானே-எ-று. (ஈஈ)

மைத்தனெனுஞ்செயத்திரதன்சிரத்தையிந்த - மண்ணில்விழச்செய்தவர் கண்மடிகவென்றே, சிந்துபதிதவசுபண்ணியிருக்கப்பார்த்தன் - செயத்திரதன்றலையறவேயெய்தபாணப், சந்திபண்ணுங்கையிற்சிரத்தைக்கொடு போய்வைக்கத்-தறையிலிட்டுச்சிந்துபதிதானேசாக,இந்தவகை தொடுப்பித்துமன்றுபார்த்தன் - இறைவாதற்காதனேயெம்பிரானே, *

(இ-ள்.) புத்திரனுயிரயசயித்தவனதுசிரத்தை இத்தப்பூமியில் விழச்செய்தவர்கள்சாகக்கடவர்களென்றுசிந்துபதிதவஞ்செய்துகொண்டிருக்க,அருச்சுனன்சயத்திரதனுடையதலையற்றுப்போகவெய்தபாணமானது தலையைச்சிந்துபதிசந்தியாவந்தனஞ்செய்யவிரித்தகைகளின்மேற்கொண்டுபோய்வைக்கஅதைஅவன்அறியாமல்பூமியில்விழவிட்டு, தானேஇறந்தனன்இந்தவகைஅம்பைத்தொடுக்கச்செய்தும் அந்நாளில்அருச்சுனன் இறக்காமற்காத்தாய் எம்பிரானே-எ-று. (ஈச)

கன்னனெய்யுங்கடுநாகக்கணையாற்பார்த்தன் - கழுத்தறுந்துமாயாமற்றேராந்தாழ்த்த, மின்னுமணிமுடியிலக்காச்சென்றுசற்பம்- மிகவெட்கித்தனமீண்டுந்தொடுக்கச்சொல்ல, உன்னருளான்முன்னுளிற்குந்திதேவிக்-குரைத்தசொற்காத்தொடுத்தகணையினித்தோடேன்போ, என்னவந்தப்பாம்புதலையடித்துக்கொண்டே - இறக்கவகையிட்டனையேயெம்பிரானே *

(இ-ள்.) கர்னனுனவன்எய்தநாகக்கணையாலே அருச்சுனன்கழுத்தறுந்து இந்நிறக்காமல்நீதேரைப்பூமியில் தாழச்செய்யவேஅந்தநாகமானது பிரகாசியாநின்றரத்தினகிரீடம்சூழியாகச்சென்று நாணத்தோடு மீண்டுக்வர்து தன்னேமறுபடியும் தொடுத்து எய்யும்படிகர்னனைக்கேட்டுகொள்ள, உன்னுடைய அருளுப்பாட்டாலே சென்றகுந்திதேவிக்குக்கொடுத்தவாக்கைக்கருதிக்கொண்டு, தொடுத்தகணையைஇனித்தொடுக்கமாட்டேன் போவென்றுசொல்ல அந்தப்பாம்புதலையைத் தேர்ச்சக்கரத்தில் மோதிக்கொண்டு இறக்கும் வகையைச்செய்துவைத்தாய் எம்பிரானே-என்றவாறு. (ஈடு)

நினம்பல்லீராயிரங்கோதானங்பண்ணும் - நிறலரசன்முன்னேநாளீந்த
வோராத், தனதுதோரத்நிற்சேரத்தேரான் - தானுமொருவற்களித்தசா
பத்தாலே, மனதடுங்கிக்கிணற்றினிற்பச்சோந்தியாகி - மயங்கியுறநீயெடு
க்கச்சாபநீங்கி, இன்னிறலையுலகமெல்லாம்புரக்கவைத்தாய் - இறவாதாரா
யணனேயெம்பிரானே *

(இ-ள்.) தினமும்பன்னீராயிரம்பசுக்களைத்தானஞ்செய்துகொண்டுவந்
தவெற்றியையுடைய நிருமுகாராசன்முன்னேதான்தானஞ்செய்தஒருபசு
தானம்வாங்கினபிராமணனிடத்தினின்றுதப்பிஓடிவந்ததன்னுடையகொ
ட்டாரத்திலுள்ளபசுக்களோடுசேர்ந்துகொண்டது. அதை அந்தநிருமு
காராசன்அறியாமல்தானும்வேறொருபிராமணனுக்குத்தானஞ்செய்ய, அ
தைஅவன்ஓட்டிக்கொண்டுபோகையில், முன்தானம்வாங்கினபிராமணன்
கண்டுஇதுஎன்னுடையபசுவென்றுஅவனோடுபோரிட்டுஅரசனிடத்துவந்
துசொல்லிக்கொள்ள, அரசன்வேறுபசுகொடுக்கிறேனென்ன அதற்குச்ச
ம்மதியாமல்கொடுத்தசாபத்தாலேஅரசன் உள்ளங்கலங்கிஒருபெரும்பா
ழ்ங்கிணற்றில் தன்னுருவமாறிப்பச்சையோணாகிநெடுநாளாகக்கிடக்க, அ
துகண்டபாதவப்புத்திரர்கள்உனதுசத்நிதியில்தெரிவித்தமாத்திரத்தில்,நீ
சென்றுஎடுக்க, அவன்முன்னேயசாபம்நீங்கிச்சூரியனைப்போலத்தேககாந்
தியினையுடையவனாகி உலகமுழுமையும் ஆண்டுசுவர்க்கத்தையடையச்செ
ய்தாய்-எம்பிரானே-எ-று. (எசு)

வரத்திலரனுங்கணமும்வாயல்காக்க - மதத்தவாணுசரன்மேனீயெதிர்க்க,
உருத்திரனைக்கினிவிடநீகுளிரினாயேவ-உருப்பமவிந்தரன்முற்றுமோய்ந்த
காலை, கரத்திரளிற்படையெடுத்தேயெதிர்த்தவாணன்-கைகளோராயிரத்
திலிரண்டுகையை, இருத்திமற்றைக்கரங்களெல்லாந் துணித்துக்காத்தாய்.
இலகுசக்காயுதனேயெம்பிரானே. *

(இ-ள்) தான்கொடுத்தவரத்தினாலேசிவனும்,கணபதி, சுப்பிரமணியன்,
வீரபத்திரன், காளி,முதலியபிரமதகணங்களும்,கோபுரத்துவாரங்காத்து
க்கொண்டிருப்பதினாலேஅதிகஉன்மத்தராகிச்சாதுசனங்களோடலித்துகொ
ண்டிருந்தவாணாசுரன்மேல்,ஸ்ரீகண்ணனவதாரத்தில்நீபடையெடுத்துவந்
துபாணப்பிரயோகஞ் செய்யச்சக்கச்சக்தியில்லாதவர்களாய் ஐங்கரன்
முதலியபிரமதகணத்தார்முறியப்போடஅதற்குமேல்சங்கரன்சைவசுரத்
தைப்பிரயோகிக்கஅதுகண்டுநீ உருத்திரனுக்குப்பிராணப்காரஞ்செய்யா

தபடி நியமித்து வைத்தினவரத்தைப்பிரயோகிக்கவேசிவன் மூர்ச்சித்து விழச்சைவசுரமான துதோற்றுதீயேபரம் பொருளென அறிந்துதிதித்து மறைந்தது, மைசியில் தன்னுடைய ஆயிரங்கைகளிலும் ஆயுதங்களோடு தாங்கிவந்தெதிர்த்தவாணனுடையகைகளைச்சக்கரப்பிராலல் அறுத்துத் தள்ளுகையில்உமைசன்வந்து அடியேன்பொருட்டுஇந்தவாணன் செய்த அபசாரத்தை மன்னித்தருளவேண்டுமென்று உன்னை வேண்டித்துதிக்க ஆயிரத்தில்இரண்டொழியமற்றகரங்களையெல்லாம்துண்டித்துக்காத்தாய் பிரகாசியா நின்ற சுதரிசனப்பிரானேயுடையானேஎம்பிரானே-எ-று. ()

பொன்னுலகைச்செயித்தநரகாசுரன்முன் - பூதலத்திற் கொடுவந்து வைத்தாய, கன்னியர்கள்பதினாயிரம்பேர் தம்மைக் - கலியாணமுகூர்த்த மொன்றிற்பண்ணிக்கொண்டே, தன்னைநிகரவரவர்க்கோர்பருடலுங்கி- நாடோறு மவரவர்க ளுடனே கூடி, என்னகத்திலே யிருப்பாரெங்கும் போகார் - எண்ணவற்றுப் மாயவனே யெம்பிரானே. *

(இ-ள்) சுவர்க்கலோகமுழுமையும் வெற்றிகொண்டநரகாசுரன், பூமியி லுள்ளஉத்தமகூத்திரியர்களோபும் வென்றுதான் கைறைகொண்டுவந்து வை த்தச

ள்ள, அதுகண்டுபாரிசாதவிருட்சத்தையேஉனக்குக்கொண்டுவந்து கொ
டுப்பேனென்றுஸ்ரீசத்தியபாமைபிராட்டியாருக்குத்திருவாய் மலர்ந்தரு
ளி, நகங்களினாலும்மூக்கினாலும்சிறைகளினாலும் வேதவிரோத அசுரஜன
ங்களோடும், ராட்சசஜனங்களோடுஞ்சிலன்னபின்னஞ்செய்தும்வெற்றியுள்ளகரு
டன்மேல்ஆரோகணித்தருளிச்சுவர்க்க லோகத்துக்குப்போய்ப் பரிமளத்
தைவீசுகின்றபாரிசாதவிருட்சமொன்றுநீகொண்டுவரும்போது, உன்னை
யதியாதவர்களாய்வந்தெதிர்த்ததேவர்களும்இந்திரனும்மூர்ச்சித்து விழு
ம்படிகருடனையோடுபொருசன்னியத்தைத்திருப்பவளத்தில்வைத்தூதி அ
ந்தத்தருவைக்கொண்டுவந்துஸ்ரீசத்தியபாமைபிராட்டியாருடைய சிங்கா
சனத்தில்நாட்டினபின்யாவர்களுக்கும்நியாமகனேஎம்பிரானே-எ-று ()

பயிர்க்கிறைத்தக்காலில்வருங்கிணற்றுநீரைப்-பாகவதன்கைச்செம்பான்
மூகந்துகொண்டு, வெயில்சுடுகால்குளிரவேதனைத்தக்கொள்ள- வேளா
ளனிறக்கியமதூதர்பாசக், கயிற்றினிற்கட்டொட்டாமன்முகுந்தாவுன்றன்
கணநாதராதரவாயழைத்தவந்தே, இயற்சுருதிமுழங்கியசீர்வைகுந்தத்தி
ல்- இனத்தொடுவைத்திடச்செய்தாயெம்பிரானே *

(இ-ள்.) ஒருவேளாளனால் தன்பயிருக்காக இறைக்கப்பட்டுவாய்க்கா
ல்வழியே வருகின்றகிணற்றுநீரைஒருபாகவதர், தமதுகையிலுள்ள செ
ம்பால் மொண்டுகொண்டு, வெயில்சுடுகின்ற கால்களாற்குளிர நனைத்துக்
கொண்டுசெல்ல, அந்தநீரிறைத்தவேளாளன்விதிப்படிஆயுள்முடிந்துஇற
க்க, யமதூதர்கள் அவனுடைய ஆன்மாவைப் பாசக்கயிற்றாற்கட்டவெ
ட்டாமல்முகுந்தனே உன்கணநாதர்கள் அன்போடழைத்துக் கொண்டு
போய்அபௌருஷேயமாகிய தென்மொழிவேதமும்வடமொழிவேதமு
ம்கோஷிக்கின்ற சிறந்தஸ்ரீவைகுந்தத்தில் நித்தமுத்தர்களோடு வைக்கு
ம்படிச் செய்தாய்எம்பிரானே-எ-று. (எ)

பாதகவெஞ்சினமுடையகிராதன்முன்முன்-பதியிழந்தவிதவையைப்பெ
ண்டாக்கிக்கொண்டே, பாதையினிற்சுடுகட்டியிருக்கவோர்நாள்- பா
கவதர்க்கமுதளிக்கும் பொருட்டாஅச்சிப், போதொராடியவனவன்பத்த
லிலேதின்று- போகவடியாற்கு நிழலீந்தானென்றே, ஏதமறவிவனெடு
ஞ்சாலோகத்தில்- ஏற்றமுறவைத்தனையேயெம்பிரானே. *

(இ-ள்,) பாதகத்தைவினைக்காநின்ற வெவ்விய கோபமுள்ள வேடன் போலக் கொடுந்தொழிலைச்செய்யும்ஒருபாவியானவன், நரகலோயிழந் த ஒருவிதவையைத் தனக்குப்பெண்டாகவைத்துக்கொண்டு, வழியிலே ஒருகுடிசைவேய்ந்து அதில்வாசஞ்செய்ய, அதியாராதனைசெய்வதற்காக ஒருமெய்யடியார்நெடுந்தூரஞ்சென்றுசிவிப்போதில், அந்தப்பாவியி னுடையகுடிசையினிழலிலே நின்றுசற்றுஇளைப்பாறிப்போக, மகாபாத கனாயினபோதிலும் என்னடியானுக்குஒதுங்க நிழல்கொடுத்தானென்று அவனுடையபாபங்களைஒழித்து இந்தமெய்யடியாரோடு அவனையும்ஸ்ரீ வைகுண்டத்தில்பெருமையாகவைத்தாய்எம்பிரானே-எ-று. (எக)

அடவிதனிலரிதாசனைறியேசெல்ல - அறியாமற்பறிக்கவந்தோர்கள்எல்லாம் கிட்டட், படைவிற்கொண்டோர்வேடன்கூடியதால் - பறியாக்கள்எல்லாம்மிக கூடஓர்போய்ச்சேர்ந்தே, திடமுற்றபத்தியினுன்னைப்போற்றத் - திருவாராதனஞ் செய்யவேடனலே, இடரற்றுனென்றவனை வைகுண்டத்தே- எண்ணமுறவைத்தனையேயெம்பிரானே *

(இ-ள்) ஒருபாகவதர்காட்டின்வழியேசெல்ல, அவரறியாதபடிப் பதி விருந்துபறிக்கும்படி ஒருகள்ளன்வந்து நெருங்கினவடனே, அக்காட்டி லுள்ளகிராதனாகியவேடனொருவன்வில்லைக்கையிற்கொண்டு அந்தப்பாகவதருக் குச் சமீபமாகவந்ததைக்கள்ளனறிந்து ஒன்றும்பறிக்காமல் தொலைந்து போனான், அவர்அவரிடம்போய்ச்சேர்ந்துதிடமானபக்தியோடு உன்னைநமஸ் கரித்துத்திருவாராதனஞ்செய்தனர் அவன்சமீபமாக வந்ததினாலேயல்ல வாவுன்னடியானுக்குயாதொருதுன்பமுமில்லாமற்போயிற்றென்று வே டனையும்ஸ்ரீவைகுண்டத்தில்மூனிவர்முதலாயினோரும்இப்பேறுநமக்கில்லையே யென்றுஎண்ணும்படிவைத்தாய்எம்பிரானே-எ-று. (எஉ)

உன்னுமமாயிரத்திலொருபேர்சொல்லான் - உனதடியார்க்கொருநாளும் வணங்கிப்பேசான், சொல்லுமெப்பெரியோர்கள்புத்திகேளான் - சீர்சால் வதெல்லாம்பொய்கொலையுங்களவுஞ்செய்வான், அந்நீசன்திருடிவந்தே திருவரங்கத்-தரிகென்றுவிற்றதனாலவனுக்காவந், தென்னூரின்பேர்சொ ன்னானென்பேர்சொன்னான் - என்றுமுத்தியளித்தனையே யெம்பிரானே

(இ-ள். உனதுசகஸ்திரநாமங்களில்ஒருதிருநாமத்தையாவதுவாயாலுச் சரித்து அறியான், உன்னுடைய அடியாரைக்கண்டு ஒருநாளாவது

வணக்கமாயுபசரித்தறியான், பெரியோர்கள்தல்லபுத்திகளைப்போதித்தா லும்சிறிதாவது காதுகொடுத்துக்கேளான், பேசுவதெல்லாம் பொய்மே யாம், செய்கையெல்லாம்கொலையுங்களவுமேயாம், அப்படிப்பட்ட நீசன்றிருடிக்கொண்டேவந்து திருவரங்கத்தரிகையென்றுவிற்றதனுலே மரணதசையில்அவனுக்காகவந்து என்னுரின் பேரைச்சொன்னுன் என்பேரைச் சொன்னுனென்றுஸ்ரீவைகுந்தத்தைஅவனுக்கு அருள்செய்தாய் எம்பிரானே-எ-று. (எஉ)

தாயாய்தந்தைதயாய்க்குருவாய்த்தேவாய்த் - தாரமாய்ப்புத்திரரா யுறவாய்தானுய், நீயாகியெள்ளிலெண்ணெய் போலேயெங்கும் - நிறைந்து பரிபூரணமாய்நிற்குஞ்சோதி, மாயாகண்ணுவரதாவாசுதேவா - மாதவா வென்றுசரர்வணங்கிப்பேற்ற, எயாவென்றேயாமல்வேயாள் வாயால் இசையுதிநின்றனேயேயெம்பிரானே. *

(இ-ள்.) தாயாகி, நல்லதந்தையாகி, ஆசாரியனுகி, தெய்வமாகி, மனைவாளாகி,புத்திரராகி,பந்துவாகி,எனக்குள்அந்தரியாமியாய்நிற்குங்காரணத்தாலேதானுகி,உன்னுடனமையாகியஎம்போலியரைக்காக்கும்சுவாமியாகி எள்ளிலெண்ணெய்வியாபித்திருப்பதுபோல்அண்டங்களிலும் அணுக்களிலும் பரிபூரணமாகநிறைந்து இருக்கின்றபரஞ்சுடரே, மாயனேகண்ணனேவரதனேவாசுதேவனே மாதவனேயென்று ஸ்ரீவைகுந்தத்தில் நித்தமுத்தர்கள்வணங்கிநமஸ்கரிக்க, உன்னுடையசௌலப்பியகுணதிசயத்தாலஅஞ்ஞானந்தகார நிறைந்தபூமியிலவதரித்துப்பசுக்களை உனதுதிருவாயால்ஏயாவென்றுசொல்லிமேய்த்தும்அந்திப்போதில்வேய்ங்குழலால்ஓயாமல்கானஞ்செய்துகூடச்செய்தும்ஓரிடச்சிறுவனைப்போலநின்றும் இதென்னகருணைஎம்பிரானே-எ-று. (எச)

கன்றுடனேசோபாலரதேகம்பேராக் - கழல்வயனபகரித்துக்கொடுபோய்வைக்க, வென்றியுடனந்தந்தவடிவமாகி - வேற்றுமையற்றனைத்து முறவிளையாட்டும்றும், அன்றிருந்துமறுநாட்பிரமன்றன்வந் - தனைத்துமுறைகண்டஞ்சித்தண்டன்பண்ணி, இன்றடியேன்செய்தபிழை பொறுத்தருக்காவென் - றேத்தவளித்தனையரியேயெம்பிரானே *

(இ-ள்.) கன்றுகளையும், மேய்த்துக்கொண்டிருந்த ஆயர்சிறுவர்களைபலரையும், பிரமனவன்உனக்குத்தெரியாமற்செய்தபோய் ஒளித்தவை

க்க, அதற்காகச்சிறிதுமனந்தளராமல்வெற்றியோடுஅத்தக்கன்றுகளைப் போலவும், கோபாலர்களைப் போலவும் உருவங்கொண்டுகுணஞ்செய்கை பாவம் எவ்வளவும் பேதப்படாமலிருக்கஒருவருஷம் திருவிளையாடல்செய்தாய்பின்புபிரமன்தேவதினமென்னப்படும் ஒருவருஷம் பொறுத்திருந்துமறுவருஷம்வந்துஉன்னுடையஇத்திருவிளையாட்டை மூற்றுங்கண்டுபயந்துதண்டனிட்டுஇன்றுஅடியேன்தெளிவில்லாமையாற்செய்தபிழையைப்பொறுத்துக்காத்தருளென்றுதுதிக்க அவனுக்குக்கருணை செய்தாய் எம்பிரானே எ-று. (எ)

பலவிசயசராசந்தனுன்றன்மீது - படையெடுக்கமுதித்தோடிப்பின்பொருக்கால், மலைமிசைநீயேறத்தீமூட்டிநீதான் - மடிந்தனனென்றெண்ணிவென்றிதனென்றேச, அலைவின்றிநீயுதித்துமாறுபாகம் - ஆகவொருதுரும்பினைத்தான்பிளந்தெறிந்தே, இலகுபலமுளவீமசேனன்கையால்- இருபிளவாக்கினையரியேயெம்பிரானே. *

(இ-ள்.) வல்லமையும், வெற்றியுமுடையஜராசந்தனவன்உன்மேல்படையெடுத்துவர, அவனுக்குத்தோற்றோடுவதைப்போலஓடி,பின்பொருநாள்அவன்படையெடுத்துவந்தபோது ஒருமலையின்மேல்நீயேற அந்தமலையச்சுற்றிலுந்தீயைமூட்டிநீ இறந்தாயென்றெண்ணிச் செயம்தன்னுடையதென்று அவன்போக, தீயினல்யாதொருதுன்பமுமில்லாமல்நீஇறங்கிவந்துசிலநாள்கழிந்தபின்அவனோடு பீமனைஉயுத்தம் பண்ணுவித்து, அந்தப்போரில்பீமசேனன்ஜராசந்தனைப்பலமுறைபிளந்தெறிய, அப்பிளவுகளிரண்டும்ஒன்றுமுக்கூடிஉயுத்தம்பண்ணிக்கொண்டுவருவதினல் ஆபாசமுற்றவாயுபுத்திரனுக்கெதிரேநீநின்று ஒருதுரும்பைச்சரிப்பங்காப்பிளந்துமாறுகாட்டியவேஅதைஅறிந்துகொண்டமிகுந்தபலசாலியாகிய பீமசேனனுடையகையால்அந்தஜராசந்தனைஇரண்டுபிளவாகச்செய்வித்தாய் ஸ்ரீஹரியேஎம்பிரானே-எ-று. (எ)

நிருவாணத்துடன் சூளித்துப்பனைகள்போல்- நின்றமையாற்சரர்கண் முனிசாபத்தாலே, மருதாகிநிற்குமிடத்தன்னையாய்ச்சி - மதியாமல்வெண்ணெய்க்காயுறலிற்கட்ட, வெருமாவாலேதவழ்ந்துமருதைக்கிட்டி - விறற்றிகிரியாவுரலாலிறுத்தவிழ்த்தி,இருளானசாபந்தீர்த்தவனாய்பண்டை-யற்றமுறலவத்தனேயெம்பிரானே. *

(இ-ள்.) அநேகதேவதாஸ்திரிஜனங்களோடு நிருவாணமாகத் தடாகத்தில்சலக் கிரீடைசெய்து, பலஸ்திரிகள்வெட்கப்பட்டுக்கைமேல்வந்து தங்கள்வஸ்திரங்களையுடுத்திக்கொள்ளச்சிலரைப்போகவொட்டாமல்தடுத்து அவர்களோடு அம்மணமாய்ப்பிணைமரங்கள்போலநின்றநளகூபரன் மணிக்கிரீவன்என்னும்யக்ஷர்கள், ஸ்ரீமந்நாரதபகவானுடைய சாபத்தாலேமருதமரங்களாகிநிற்கிறகாலத்தில் ஸ்ரீயசோதாபிராட்டியானவள் நீ வெண்ணெய்களவுசெய்ததற்காகஉன்னைத்தேவதேவநாயகனென்றுணராமல் உரலோடுசேர்த்துக்கட்ட, நீஅதற்குஅஞ்சாமல் அந்தஉரலோடு தவழ்ந்துகொண்டுஅம்மருதமரங்களுக்குஇடையேசென்றுவெற்றிபொருந்தியசக்காயுதத்தையுடையவனே உன்பின்னே உருண்டுவருகின்றஉரலினாலேஅம்மரங்கள்முறிந்துவிழச்செய்து, இருள்போலக்கவிந்து நின்றசாபத்தைநிவர்த்திசெய்து அந்தநளகூபரமணிக்கிரீவர்களைப் பழையவுருவத்தையடையச்செய்தாய்எம்பிரானே-எ-று. (எஎ)

நிலமாது மோகித்தே யுனக்குப்பெற்ற - நிருதாதர காசுரனையும் பர்க்காதீ,
கொலவேண்டி வந்துபொர வவன்விடுத்த - கொடுங்கணைநின் னெற்றியிற்
பட்டுநிரத்தாற்கண், மலர்மூடிக் கொள்கையினின் கரத்திலுற்ற - வலிசேல
யிற் சத்தியபாமைப் பெண்ணெய்ய, இலகாழியெய்தாப்போன் றரக்கன்
மேற்பட் - டிலக்க நினைத்தனையரியே யெம்பிரானே. *

(இ-ள்) ஸ்ரீபூமி பிராட்டியார் ஸ்ரீவராகவதாரத்தில் உனது திவ்வியமங்களவிக்கிரக சௌந்தரியத்தைக்கண்டு மோகித்து, உனக்குப்பெற்ற இராட்சதச்செய்கையுள்ள நரகாசுரனைத் தேவர்களுடைய நன்மையின் பொருட்டுக் கொல்லத் திருவுளங்கொண்டு அவனோடு போர்செய்யா நிற்கையில், அந்த அசுரன் எய்தகொடிய கணையானது உனதுநெற்றியில் தைத்துப்பெருகிய உதிரத்தாலே நீநிருக்கண் மலர்களை மூடிக்கொண்டபோது, உனது ஸ்ரீஹஸ்தத்திலிருந்த தனுசைவாங்கி ஸ்ரீசத்தியபாமைபிராட்டியார் புங்காறு புங்கமாக எய்தபாணபரம்பரைகள் அந்தநரகாசுரனுடைய உடல் முழுமையும், விளங்குகின்ற சக்கரப்பிரானே எய்தாப்போலத் தைத்திருவியதலால் அவனைத்திகைத்து நிற்கும்படி நினைத்தாய் எம்பிரானே-எ-று. (எஅ)

சயமிகுத்த சாம்பவனைப் பொருதுவென்றே - சாம்பவதிப் பெண்மணி
யைக் கொண்டவந்தாள், நயமுடனே சிமந்தகமாமணியுங்கொண்டே-தா
டனைத்தும் போற்றவெழி லாகவந்தாய், அயனையளித் துலகனைத்தும் ப
டைக்கப்பண்ணும் - அச்சுதனே யென்றமரர்முனிவரெல்லாம், இயலிசை
சேர்வேதத்தாற்றுதிக்கவெளிற்-றிருக்குறாராயணனேயெம்பிரானே *

(இ-ள்) ஸ்ரீகிருஷ்ணவதாரத்தில், அசுரர்களைக்கொலைசெய்துவெற்றியிகு
ந்த சாம்பவனைப் போரிசெய்து வென்று அவருடைய திருக்குமாரத்தி
யாகிய சாம்பவதி தேவியைநீ அங்கீகரித்த அத்தநாளில், அம்போதுசிமந்
தக மணிமாலையையுங்கொண்டு நாட்டிலுள்ளோர்யாவரும் துதிசெய்யும்
படி அலங்காரமாக வந்தாய், பிரமனைப்பெற்றுச் சகலாண்டங்களையும் சி
ருட்டிக்கச்செய்த அழிவில்லாத முதற்கடவுளே யென்றுஎல்லாநித்தர்களு
ம், முத்தர்களும் இலக்கணமும் இசையும் அமைந்திருக்கின்ற உபயவேத
ங்களாலும் துதிக்கத்திருவதற் தாழ்வான்மேல் வீற்றிருக்கின்றஸ்ரீபரமப
தநாதனே எம்பிரானே-எ-று. (எ)

நிட்டமுட னுயரில்லில் வெண்ணெய் நெய்பால் - திருடுகைக்காக் கண்ட
பெண்க ளுனக்கயிற்றால், கட்டிவைத்து நற்றல்முனே தன்னிற்சென்றே-
கைதொழுத சோதையுடன் முறையிட்டம்பொன், தொட்டிலிலேபார்க்
கமிகக்கொறுக்கைவிட்டே- துங்குதல்கண்டஞ்சியத்திப் பெண்கள்தெண்
டன், இட்டதி யாதேசொன்னேனும் பொறுமாதாவே-என்றுரைக்கப்பண்
ணினையே யெம்பிரானே. *

(இ-ள்) சமயம்பார்த்து ஆயர்களுடைய திருமாளிகைகளிலுள்ளவெண்
ணெயையும் பாலையும் நீ களவுசெய்ததற்காக, அந்தக்கோபால ஸ்திரீகள்
உன்னைத் தாம்பினால் கட்டிவைத்துஸ்ரீநந்தகோபருடைய திருமாளிகைக்
குப்போய்க் கைகளால் தண்டனிட்டு ஸ்ரீயசோதைபிராட்டியாருடனேஎ
ம்முடையதாயேஉம்மூடையபுத்திரன் எமதுகிருகத்திலுள்ள வெண்ணெ
ய்பால் திருடியதற்காகக் கட்டிவைத்திருக்கிறோம்வந்துபார்க்கக்கடவீரென்
றுசொல்ல, அதுகேட்டு ஸ்ரீயசோதைபிராட்டியார்தனைத்துஎம்மூடை
யபுத்திரரத்தினம் அழகியபொன் தொட்டிலில் துங்குகின்றனே யென்
றுகாட்டக்கண்டு, அந்தமங்கையர்கள் யாவர்களும்பயந்து தண்டனிட்டு
எங்களுடைய அறியாமையால் குற்றஞ்சொன்னோம் எங்கள்தாயேபொறு
த்தருள்வீரென்று சொல்லும்படிசெய்தாய் எம்பிரானே-எ-று. (அ)

மகாத்திற்சூரியன்வந் துதிக்குநாளில் - வர்த்திக்க விந்திரனே நோக்கிப்பொ
ங்கல், மிகவிட்டுக் கயிலைமலைபோலே வைக்க - விளையாட்டா யத்தனையுநீ
யேயுண்ணக், கனத்திவிந்திரனும் வந்துபார்த்துக்-கனமழையைநிலமீதி
ல் விடுத்தமட்டில், இகபரத்துக்கிறையவனே நிரைக்காக்குன்றை - எடுத்
தமழை தடுத்தனையே யெம்பிரானே.

(இ-ள்) மகரத்திலே சூரியன்வந்து உதிக்கின்றநாளில் திருவாய்ப்பாடி
யிலுள்ளயாவருப், மற்றுங்கிராமங்களி லுள்ளவர்களும் வர்த்திக்கவேண்டி
மென்று தேவேந்திரனைக்குறித்து மிகுதியாகப் பொங்கலிட்டு வெள்ளிம
லைபோலக் குவித்துவைக்க, அவ்வளவுபொங்கலையும் திருவிளையாட்டாகநீ
யே அமுதுசெய்தருளியதை ஆகாயமார்க்கத்தே இந்திரனும் வந்துபார்
த்துக்கனத்தமழையைப் பூமியில் பெய்யும்படி மேகங்களை விட்டமாத்தி
ரத்தில், இகத்துக்கும் பரத்துக்கும் நாயகனேநீ ஆயர்முதலானவர்களையும்
பசுக்கூட்டங்களையும் காக்கும்படி மலையைஎடுத்து அந்தப் பெருமழை
யைத்தடுத்தாய் எம்பிரானே-எ-று. (அ)

நீமையிலுன் மகன்பழிக்காக் கண்ணில்லாத - நிரிதராட்டிரன் வீமனைகொ
ல்லவெண்ண, வீமனைப்போல் வல்லிருப்பாற் சமைப்பித்தத்த - விதியி
லான் மூன்னிறுத்தி வீமன்பேச, மாமிடுக்காற் கைத்தெருக்கவிருப்புவீம
ன் - வலியதலை தெறித்துயரப்பறக்கவேகண், டேமமுடன் வீமனையாள்
கண்ணுவென்றே - எல்லோருந் தொழவிருந்தா யெம்பிரானே.

(இ-ள்) செய்த நீமையின்பொருட்டித் தன்மகனைக்கொன்ற பழிக்காக
நேத்திரங்களில்லாத திரிதராட்டிரன் வீமனைக்கொல்ல வெண்ணங்கொண்
டி அதைப்புறத்தே காட்டாமல் மறைத்துப்பிரியத்தைக்காட்டித் தழுவவே
ண்டுமென்று அழைத்தபோது, மூற்றுமுணரவல்ல நீ வீமனைப்போல் வ
லியவிரும்பால் ஒருருவஞ்செய்வித்து அந்தக்குருடன் முன்னே நிறுத்தி
வீமன்பின்னேநின்றுபேச, மிகுந்ததனது வலியினாலே கைகளைதெருக்கி
த்தழுவவே இரும்பாற்செய்த வீமனது வலியதலை தெறித்து உயரப்பறக்
கக்கண்டு அங்கிருந்த பாண்டவர்கள் முதலான எல்லோரும் சுகமாக வீம
னைக்காத்த கண்ணபிரானே யென்று தொழும்படியிருந்தாய் எம்பிரா
னே-எ-று. (அ)

உலகங்களீரேழுங் கற்பாந்தத்தில் - ஒருங்கவே யோர்கணத்தி லெளிதாய்

ட்கொண், டலிவின்றிக் கற்பாந்த வெள்ளத்தன்னில் - ஆலிலைமேற்குழவி
யாய்த்துயின்ற வந்நாள், சலிலமற மதுகையிட வரையுண்டாக்கிச் - சக்க
ரத்தாற் பிளந்துடலாற் சலத்தைமூடி, இலகமுலுண் டருளுலகை யுமிழ்
ந்தேபண்டை - ஏற்றமுற வைத்தனையே யெம்பிரானே. *

(இ-ள்) சதுர்த்தச புவனங்களையும் பிரமகல்ப முடிவில் ஒருகணப்பொ
ழுதில் ஒருமிக்கச்சுலபமாக உண்டு அப்புவனங்களுக்கும் அப்புவனங்களி
லுள்ள பிரமருத்திராதி சமஸ்தசேதனர்களுக்கும் யாதொருதுன்பமும்இ
லாமல் கற்பாந்தவெள்ளத்தில் ஆலிலையின்மேல் சிறுகுழந்தையாய் நி
த்திரிக்கின்ற அந்தநாளில் எங்கும்கோத்துநின்ற சலமானது வற்றிப்போ
க, மறுபடியும் சிருட்டிதிதி சங்காரங்களைச்செய்ய முன்உண்டருளிய உல
கங்களை உமிழ்ந்து தேவர்களைச் சிருட்டித்து அத்தேவர்கள் கர்வித்தபோ
து அவர்களுடைய கர்வத்தைப்படக்குகிற நிமித்தம் மதுகைடவர்களையுண்
டாக்கி, அவர்களால் வருத்தப்பட்ட தேவர்களுடைய பிரார்த்தனையின்
பொருட்டுஅத்தமதுகை டவர்களைச்சக்கரத்தாலே பிளந்து அவர்களுடை
லாற்சமுத்திர நீரைமூடச்செய்து பழையபடி உலகங்களைப்பெருமையுற
ச்செய்தாய் எம்பிரானே-எ-று. (அஞ)

அருமறைகொளிருக்கெசர்சாமத்தினோடும்- அதர்வணமகியசதுவேதங்
கடம்மைச், திருடியெடுத்துக்கொண்டேயுத்திசேரும்- தீயனுக்காமச்சா
வதாரமாகி, ஒருசெலுவிற்சமுத்திரத்தைச்சருக்கியேவைத் - துக்கிரத்தா
ற்சோமுகாசுரனைக்கொன்றிட், டிருளறவேவிதிபடைக்க வவ்வேதத்தை -
இரங்கியளித்தனையரியேயெம்பிரானே. *

(இ-ள்) அருமையாகியவிதிவிலக்குகளைச்சொல்லுகின்றஇருக்கு-எசுர்-
சாமம்- அதர்வணம் ஆகியசதுர்வேதங்களையும் பிரமனிடத்தினின்றும்க
வர்ந்து கொண்டுசமுத்திரத்தி லொளித்துக்கொண்ட துஷ்டசோமுகா
சுரனுக்காகமச்சாவதாரமாகி அத்திருமேனியிலுள்ளபலசெலுவுகளில்ஒரு
செலுவிலேசமுத்திரசலத்தைஅடக்கிக்கோபத்தோடு அந்தச்சோமுகனை
க்கொலைசெய்து அஞ்ஞானவிருளொழியப்பிரமன்முன் பெற்றிருந்த அ
வ்வேதங்களைக் கருணையோடு அச்சதுர்முகனுக்கே கொடுத்தாய் எம்பி
ரானே - எ - று. (அச)

மந்தரமத்தமிழ்ந்தாமத்பாற்கடற்குள் - வளர்ந்தாதிகூர்மமாய்மலையைத்

தாங்கிச், சுந்தரவாசுகியைவடமாகச்சுற்றிச்- சுரரசுரர்கணின்றமுதங்கடை
ந்தவந்நாள், ஐந்தருசிந்தாமணிநன்னிதிகள்வெள்ளை - யானைபரிமூதேவி
தானைதேனு, இந்திராபொற்கௌத்துவமாமணியோடாலம் - இளம்பி
றையுந்தந்தனையேயெம்பிரானே. *

(இ-ள்) மந்தரமலையாகியமத்தமிழ்ந்து போகாமல் திருப்பாற்கட
ற்குள் ஆதிகூர்மாவதாரமாகி அம்மந்தரமலையைத் தாங்கி, அழகியவாசு
கியவடமாகச்சுற்றித்தேவர்களும்அசுரர்களும்நின்று அமுதமுண்டாகக்
கடைந்த அந்நாளில் பஞ்சதருக்கள், சிந்தாமணி, நலல சங்கநிதி,ப
துமநிதி, ஐராவதயானை, உச்சைச்சிரவம், சேஷ்டாதேவி, தானைமுதலி
யதெய்வப் பெண்கள், காமதேனு, திருமகள், கௌத்துவம், விஷம்,
பிறைச்சந்திரன் தோன்றும்படிசெய்தாய்எம்பிரானே-எ-று. (அடு)

புண்ணியந்தெய்வதமுஞ்சேர்பூலோகத்தைப் - புற்பாம்போற் சுருட்டிக்
கொண்டேபாதாளம், நண்ணிரணியாட்சனைப்பின் முடர்ந்தேயேகி -ந
லமுடனேயாதிவராகத்தேவாகி, மண்ணுலகமனைத்து மிடந்தெடுத்தோர்
கோட்டில் - வைத்துவரவவன்மறிக்கவதைத்தத்தேவர், எண்ணவுலகீரே
ழும்படியச்செய்தாய் - இறைவாநாராயணனேயெம்பிரானே *

(இ-ள்,)யாகமுதலியசத்கிரியைகளும்,பலதெய்வங்களும்சேர்ந்திருக்கி
ன்றபூலோகத்தைப்புற்பாயைப்போலச்சுருட்டிக் கொண்டுபாதாளமேலா
கமிமபோய்ச்சேர்கின்றஇரணியாட்சனை உன்னுடையசொத்தாகிய சேத
லுசேதனசம்பட்சணர்த்தமாகப்பின்தொடர்ந்துசென்றுஉன் இச்சையா
லேபருஷிவராகதெய்வவுருவங்கொண்டுஅந்தப்பூலோகத்தை ஊடருவிச்
சென்றுஅதை ஒருகொம்பிலேவைத்துவருகையில் அக்கொடியோன்வந்
தெதிர்க்கவும்அவனைவதைசெய்துதேவாகளெலலாம்தியானிக்கும்படிபதி
னான்குலகங்களையும்முறைப்படி வைத்தருளினாய் இறைவனேநாராயண
னேஎம்பிரானே-எ-று (அசு)

நலமருவுமிளஞ்சிறுவனிரணியாய - நமவென்றுசுக்கிரனன் றேதச்சொல்
ல, அலைவின்றியிகரிநாராயணனென் - றறிந்தாக்கப்பிதாச்சுதனைக்கொ
ல்லவிட்ட, பலமல்லர்மதகரிபாம்பனனீர்வெற்புப் - படுபடைகண்மித்

திருவாக்காக்கப்பன்னி, இலகியபொற்றூணினரசிங்கமாய்வந் - திரணிய
னவதத்தனேயெம்பிரானே *

(இ-ள்,) உபாத்தியாயனுகியசுக்கிரன்இரணியாய நமவென்றுசொல்ல, உன்னுடைய நிர்ஹேதுகதாட்சத்தால்மெய்ஞ்ஞானம்பெற்ற இளஞ்சிறுபி ள்ளையாகியஸ்ரீபிரகலாதாழ்வால்சிறிதும்சல மில்லாமல் அரிகரிநாராய ணவென்றுஉண்மையைத்தெரிந்துசொல்லவும், அதுகாரணத்தால் பிதா வாகியஇரணியன்தன் துன்மதியினுல் அவனைக்கொல்லும்படிவிட்டபல ம ல்லர்களையும், மதங்கொண்டயானையையும், நிக்ருதாங்களையும், நீயையு ம், கடலையும்,மலையையும், கொடியபாடகளையும், அவருக்குயாதொருஉ பத்திரவமுஞ்செய்யாமல் நன்மையைத் தருவனவாகச்செய்து, மணிகளி ழைத்தட்பிரகாசியாநின்ற பொன்தூணில் நாரசிங்கமாய்த் திருவுருவங் கொண்டேஅந்தஇரணியனைவதைசெய்தாய்எம்பிரானே-எ-று, (அஎ)

சுரசுரர்முனிவர்நரர்கையிற்பாரில் - சுடர்வானிற்பகலிர வினுள்புறம்பில்
பொருபடையிற்சாகாவிரணியன்றன்னைப் - பொருவிலால்தர்க்கித் துண்
டென்றதூணில், நரகரியாய்ப்பொழுதுபுகுநேரத்தனில் - நாடியுதித்து
யர்வாசற்படிமீதேறி, இரணியனைத்தொடைமிசைவைத்துகிரினுலே-இரு
பிளவாக்கினையரியேயெம்பிரானே *

(இ-ள்) தேவர்கள், அசுரர்கள், முனிவர்கள், மனிதர்கள் இவர்களையினுலும், போர்செய்தற்குரிய ஆயுதங்களினுலும், பூமியினும், சூரிய ன்முதலியகிரகங்கள்உலாவுகின்றஆகாயத்திலும், பகலினும், இராவினும் ஒருபக்கத்துக்குள்ளிடத்திலும், புறத்திடத்திலும், சாகாதவரம்பெற்றஇர ணியனை, ஒப்பில்லாதமெய்ஞ்ஞானச்செல்வராகியஸ்ரீபிரகலாதாழ்வான் யான்தொழுகிறபரம்பொருளானவனதிருநாமமே வேதங்களுக்கு ஆதி யில்அந்தணர்கள்யாவரும் சொல்வார்கள், அவன்பிரமருத்திராதிகளோபுன் டாக்கி அவர்களுக்குள்தானொருவனுகவும்,அவர்களுக்கு அந்தரியாமியாக விருந்துகொண்டிருக்கின்றானுகவும் இருப்பவனென்று இன் னம்பலபலவாறுகஉண்மைகளைஎடுத்துச்சொல்லி உண்டென்று சொல்ல தூணில்நாரசிங்கவுருவமாய்அந்தநேரத்தில் திருவவதரித்துஉயர்ந்தவாசற் படியிலெழுந்தருளி இரணியனைத்தொடையில்மேல்வைத்து நகங்களி ஞலேஇருபிளவாக்கினைந்தாய்ஸ்ரீஹரியேஎம்பிரானே-எ-று (அஎ)

மையினன் மாபலிதான் வாழ்நாளத்தத் - தேவர்செய்யும் வேள்வியைத்
தான்செய்கையாலே, வாமனனய மூவடிமண்டாவையேற்று - வானிலய
பன்பூசிக்கவருதாணீட்டிப், பூமியோரடியாக்கித்தாவார்த்த - பூசான
க்குறையடியுத்தரித்துபோவென், றேமவலிற்சுமாப்பாதாளத்தில் - எழி
ற்பலியைச்சிறையில்வைத்தாயெம்பிரானே,

(இ-ள்) மாபலியானவன்உலகங்களே யெல்லாம் தன்கவா னெனப் படித்
திக்கொண்டுவாழ்கின்றநாளில்தனது தூர்ப்புத்தியினால் தேவர்கள்செய்யும்
யாகங்களைச்செய்யத்தொடங்கிய நிலையிலே அந்தத்தேவர்களுக்கு ஒதுதற்கின்
பொருட்டு வாமனமூர்த்தமாகச்சென்று எனக்கு மூன்றடிமண்கொடுவே
ன்றுஇரந்துஅந்தப்பலிவார்த்ததாரையைஏற்று, 'சூரியன்உன்திருவடியின்
விரலிலணிந்தமோதிரத்தின்மணியைப்போலவிளங்கும்படிவளர்ந்து, பிர
மன்கண்டுபூசிக்கும்படிஒருதிருவடியை நீட்டித்தெய்வலோகத்தையும், நி
ன்றதிருவடியால்பூமியையும்அளந்தமை பலியேநீதானஞ்செய்தமற்றோர
டியுங்கொடுத்தப்போவென்று கேட்டுஅதற்காசை, சுவர்க்கத்திலிருந்துசுக
த்தை யநுபவிப்பதுபோலச் சுகமாகப்பாதாளலோகத்தில்அந்தஅழகிய
மாபலியைச்சிறையில்வைத்தாய்எம்பிரானேஎ-று. (அஞ)

உலகளந்தபோதுவளர்ந் தண்டகோளத் - தைதந்திருவடியையவனி
வக்குநன்னீர், பலமுகமாயாகாய கங்கையாகிப் - பகிரதன் மெய்த்தவ
த்தாற் பார்க்கிறங்குங்காலை, சலமிகுந்த வரன்சடையிற்றங்கியந்தச் - சங்
கரனைச்செவ்வேயிழிந்தநீர்த்தம், இலகுபுகழ்க்காசியிலே கங்கையாய்வ
ந் - திடர்தீர்க்கப் பண்ணினாயே யெம்பிரானே.

(இ-ள்) உலகத்தை அளக்கும்போது வளர்ந்து அண்டகோளத்தை உ
தைத்ததிருவடியைப் பிரமதேவன் திருமஞ்சனஞ்செய்த நல்லநீரானது
பலகாலகளிலாக ஒடிவந்து சுவர்க்கத்தில் மந்தாகினியென்றழைக்கும் ஆகா
யகங்கையாகிப் பகீரதமகாராசன் செய்தமெய்த்தவத்தினாலே பூமியில்இ
றங்குங்காலத்தில், தாமசகுணமுள்ள அவனுடைய சடையிலேதங்கி அந்த
ச்சங்கரனைதன்மையுள்ளோனென்று பொருள்கொள்ளும் சிவனென்னும்
பெயரையுடையவனைச்செய்து அவன்சடையினின்றிழிந்து பெருகியநீ
ர்த்தமானது விளங்கிய புகழையுடைய காசியிலே கங்கையென்னும்பெய
ரையுடைய தாகிவந்து தன்னிலே மூழ்குவோர்களுடைய தீவினைகளைத்
தீர்க்கப்பண்ணினாய் எம்பிரானே-எ-று. (அ)

தசரதன்பா லுதித்துமுனி யாகமுற்றித் - தாட்டுளாற் கல்லிப்பெண்ணு
க்கியார்க்கும், வசமிலாத் நியம்பகத்தைக் குனித்தொடித்து - மனமகிழச்
சீதையைநன் மணமுஞ்செய்து; ஞ்சலமிபற் றிக்கவியார் சேதுகட்டிக்-
கொடியரா வணரும்ப ருணலாக்கொன், றிசைபெறவே வீடணற்குப்
பட்டங்கட்டி - ஏற்றமுற லவத்தனையே யெம்பிரானே. *

(இ-ள்) ஸ்ரீதசரதசக்கரவர்த்தியாரிடத்துஅவதரித்துத்தாடகையைச்சங்
கரித்து விசுவாமித்திர முனியினுடைய யாகத்தை நிறைவேற்றித் திருவடி
த்துகளினுலே கல்லினைப்பெண்ணுருவமாகச் செய்து ஒருவராலும் வளை
க்கப்படாத தநிபம்பகமென்னும் வில்லை வளைத்தொடித்துச்சநகமகாரா
சன்முதலானேர் மனமகிழும்படி ஸ்ரீசீதாபிராட்டியாரை நல்ல திருமண
ஞ்செய்து, கைகையினுடைய கட்டளையால் காட்டுக்குச் சென்றவிடத்தி
ல் பிராட்டியார் பக்கலிலும் நின்னடியார்களாகிய தேவர்கள் முனிவர்கள்
பக்கலிலும் அபசாரப்பட்டராவணனைக்கொலைசெய்யும்படிதெற்கு நோ
க்கிச்சென்று வாலியைக்கொன்று ஸ்ரீசுக்கிரீவ மகாராசருக்குப் பட்டங்க
ட்டிஅவருடைய வானரசேனைகளைக்கொண்டு சமுத்திரத்தைத் திருவணை
செய்து துஷ்டர்களாகியதசக்கிரீவனையும்கும்பகருணனையும் மற்ற கொ
டியராட்சதர்களையும் வதஞ்செய்துநல்லகீர்த்தியையடையும்படி ஸ்ரீவி
பீஷணழ்வானுக்குப் பட்டங்கட்டிச்சிரஞ்சீவியாயிருக்கும்படிவைத்தா
ய்எம்பிரானே-எ-று. (கக)

வசுதேவன் சுதராறுபேராக்ஞ்சன் - வதைத்தபின்னேழாங் கருவாய்வ
ழுவிச்சென்றே, அசரீரியாவத்தநத்தகோபன் - அடைக்கலமாமுரோகி
ணியார்வயிற்றிற்புக்குச், சசிவடிவச்சங் கருடனுகிவந்தே - தக்கதிறற்கண்
ணனுக்குத்தலையனுகி, இசைவாகவலாயுதத்தாலுலகைக்காத்தாய்- எழிற்
பலபத்திராமாவெம்பிரானே. *

(இ-ள்) ஸ்ரீவசுதேவருடையபுத்திரர்களாறுபேரையும் வதைத்தபின்பு
ஏழாவது கருவாகிநின்ற நீ அக்கருவைவழிட்டுச்சென்று ஸ்ரீ
நந்தகோபருடைய திருமாளிகையிலெழுந்தருளியிருந்த ஸ்ரீரோகிணிபி
ராட்டியாருடைய கர்ப்பத்தில்பிரவேசித்துச் சந்திரனைப்போல வெள்
ளைத் திருமேனியையுடைய ஸ்ரீசங்கர்ஷணபிராளுக வவதரித்து வேத
முறைமைக்குத்தக்கவெற்றியையுடைய ஸ்ரீகண்ணபிராளுக்குத்திருத்தமை
யனுராகித்தருந்தபடி கலப்பைப்படையால் துஷ்டர்களைச்சேதித்துச்சி

ஷ்டர்களைக்காத்தாய் அழகியஸ்ரீபலபத்திரராமாஎம்பிரானே-எ-று.(கூஉ)

வசுதேவனிடத்துதித்து நந்தகோபன் - மகவாகிச்சுரர்பணிந்துபோற்ற விறி,அசுரேசரநேகருடன்கஞ்சனைக்கொன் - றைவருக்காப்பாரதப்போர்பொருதுவென்று, சிசுபாலன்வசைகேட்டுப்பொருதுசாபம் - தீர்த்தருளிவைகுந்தமவனுக்கீந்தே, இசையாகத்திருவிளையாட்டநேகஞ்செய்தாய் - ஏற்றமுள்ளகோவிந்தாவெம்பிரானே. *

(இ-ள்) ஸ்ரீவசுதேவருடைய திருக்குமாரராகவவதரித்துஸ்ரீநந்தகோபருடைய புத்திரராகித்தேவர்கள்யாவராலும் வணங்கித்துதிக்கவளர்ந்து அநேக அசுரசிரேஷ்டர்களையும் கஞ்சனையும்கொலைபுரிந்து பாண்டவர்களுக்காகப்பாரத யுத்தத்தைநடத்திசெயங்கொண்டு, சிசுபாலன் சொல்லியவசைக்கேட்டுச் சங்கரித்துப்பழையசாபத்தைத்தீர்த்து ஸ்ரீவைகுந்தத்தை அவனுக்குக்கொடுத்துஅடியோங்கள் உஜ்ஜீவிக்கும்படி துதிக்கத்தக்கதேர்த்திவளர அநேகத்திருவிளையாட்டுகளைச்செய்தாய் அநந்தகலியாணகுணநிலயமாகியகோவிந்தாஎம்பிரானே.எ-று. (கூரு)

தம்பியமெய்க்குருராமானுஜனைப்போற்றும்-நலமுடனேகச்சியில்வாழ்கடாம்பியாச்சான், தம்பைபூரிக்கொண்டியென்பா ணவபாண்டத்தில் தோய்த்ததயிர்விலைபேசிக்கொண்டுவந்தே; உம்பர்தொழு முனக்கேற்றித்தானுமுண்ண - உளத்திருள்போய்த்தயிர்க்குவிலைவாங்காக்கொண்டிச், செம்பரமஞ்சான் சொற்கேட்டுமுத்தி - ஈந்தட்டாயச்சுதனேயெம்பிரானே. *

(இ-ள்) ஸ்ரீமத்பரமவைதிகமார்க்கத்தார்கள்யாவர்களும் ஆத்மோஜ்ஜீவனமாகநஷ்டிய யதார்த்தகுருராபராகியஸ்ரீராமானுஜாசாரியரைப்போற்றுகின்ற நற்குணத்தோடுதிருக்கச்சியில்வாழ்கின்ற ஸ்ரீமத்கடாம்பியாச்சானென்பவர், தம்பைபூரிலுள்ளகொண்டியென்பவள், புதுப்பாண்டத்தில் தோய்த்ததயிரைவிலைபேசிக்கொண்டுவந்துதேவர்களெல்லாம்வணங்குகின்ற உனக்குநிவேதித்துத்தாமும் அமுதுசெய்யவே, உள்ளத்திலுள்ள அந்தகாரம்நீங்கித்தயிர்க்குவிலைவேண்டாமென்றகொண்டிக்கு அடியேங்களுடைய சுவாமியாகியஸ்ரீமத் கடாம்பியாச்சானுடையவிண்ணப்

பத்தைக்கேட்டுப் பரமபதத்தைத் தந்தருளினுய் அச்சுதனே எம்பிரானே-எ-று. (கூச)

பாகவதகிருட்டினவையங்காரிற்பால்-பத்திகொடுகீர்த்தனமிலட்சம்பாட, நீகருணைகூர்ந்துதிருப்பதிநூற்றெட்டும்- நிமிடத்தினைசமூட்டிமேலுற்றவைத்தாய், மேகமுடனெடுத்தவனாவிழுங்கிக்காட்டி - மூடியிலவர்தரித்தபட்டும்வாயிற்காட்டி, சகமறிநின்னுட்கூடியதுங்காட்டி - எல்லாருமறியவைத்தாயெம்பிரானே. *

(இ-ள்)ஸ்ரீபாகவதராகியகிருஷ்ணையங்காரென்பவர்உன்னிடத்தில் அதிகபக்திகொண்டு லட்சங்கீர்த்தனங்களைப்பாடி நூற்றெட்டுத்திருப்பதிகளைபுஞ்சேவிக்கவேண்டுமென்றுகூவல்கொள்ள, அஃதறிந்துநீ கருணைகூர்ந்து நூற்றெட்டுத்திவ்வியதேசங்களையும்ஒருகணப்பொழுதில் நேசத்தோடுபிரத்தியட்சமாகும்படிசெய்தாய், மற்றொருகாலத்தில அவருடையகீர்த்தனத்தைக்கேட்டுமோகத்தோடு அவரைஎடுத்தவிழுங்கிக்காட்டிஅவர்முடியிலேதரித்திருந்த பட்டுவஸ்திரத்தையுங்காட்டிஆண்டானும்அடியானுமென்னும்படி உன்னிலேகூடியதையுங்காட்டி எல்லாரும் அறியவைத்தாய்எம்பிரானே-எ-று. (கூரு)

சக்கரஞ்சங்குபரிகதைவாடனுவோடைந்தும் - தரித்தபருடோத்தமனே கமலக்கண்ணு, மிக்கபராபரமூர்த்திதுளபத்தாமா - விறலுடனேமண்ணளந்துண்டிருக்குஞ்சோதி, அக்கரமம்பத்தொன்றுமிச்சொல்லாய்ச்சொல்லின் - அருத்தமுமாயெட்டெழுத்தில்வடிவமாகி, எக்கணுமணுவுக்குமணுவாய்நின்றும் - எழிற்குருவாயுநிக்கின்றயெம்பிரானே. *

(இ-ள்) சுதரிசனமென்னுஞ்சக்கரமும், பாஞ்சசன்னியமென்னுஞ்சங்கமும், உயர்வாகியகௌமோதகியென்னுங் கதாயுதமும், நாந்தகமென்னும்வாளும், சார்ங்கமென்னும்வில்லுமாகிய பஞ்சாயுதங்களையுந்தாங்கியபுருஷோத்தமனே கமலமலர்போன்றதிருமுகத்தினையுடையானே மேலாகநின்றபராபரமூர்த்தியே துளபமாலிகாபரணனே விக்கிரமத்தோடு பூமியைத்திருவடியாலளந்தும் வாயாலுண்டும் எழுந்தருளியிருக்கின்றபரஞ்சோதியே, ஐம்பத்தொழுத்தாகி, அந்த எழுத்துகளாலாகியபதங்களாகி, அப்பதங்களுக்குப்பரமார்த்தமுமாகி, அப்பதங்களில்சிறந்த அட்டாட்சரவுருவமாகி, அவற்றின்பொருளுமாகி, எவ்விடத்திலுமணுவுக்குமணுவாயுள்ளேயிருந்தும் எமக்குஆசாரியனுமாகியும் வருகி-

ன்றுய்எம்பிரானே-எ-று. (கூசு)

திருமாதுறிலமாதுபத்திபாலே - திருவடிகள்வருடியிட விழித்துறங்கும், கருணாக்ராமுத்திவிடாவெங்கும் - எலந்தருவாயருவாகி யிருக்குமாயா, அருளாளாவுயர்சனகன்சனக்குமாரன் - அமுதவிடைநாரதன்வியாசனென்றும், இருள்சேராமார்க்கண்டன்பிருகுபோற்ற - இருக்கின்றுய் நாராயணனேயெம்பிரானே.

(இ-ள்) ஸ்ரீதேவியாரும்பூமிதேவியாரும் பக்தியோடு சீர்பாதங்களை வருடிக்கொண்டிருக்கையாலும் அநிந்துகொண்டேநித்திரிக்கின்ற கருணைநிலயமேபரமபதநாதா எப்பொருள்களிலும்நிறைந்துருவமாகவும் அருவமாகவும் இருக்கின்ற மாயாசக்தியையுடையானே அருளாளா உயர்வாகிய ஞானம்பெற்றசனகர், சனக்குமாரர்உனது கலியாணகுணங்களை அமுதம்போன்ற இசையாகப்பாடுகின்றநிமிதாரதர், ஸ்ரீவேதவியாசர், எப்போதும் அஞ்ஞானத்தையடையாதமார்க்கண்டர், பிருகு, உனதிரீர்த்தியைப்புகழ்ந்து பாடத்திருப்பாற்கடலில் சயனித்திருக்கோலமாயிருக்கின்றுய் நாராயணனேயெம்பிரானே-எ-று. (கூஎ)

கண்ணிரண்டாயிரமுடையசேஷின்பன்னுள் - காத்திருத்தி மூன்றலுடைவடிவங்காணும், பண்ணுறத்தன்னு விரண்டாராயிரத்தாலோதிப் - படித்தமுன்றன் பெருமைதனைப்பகராமாட்டான், மண்ணுலகிற்சிறியவோர்நாவாவுன்றன் - மகிமையைக்கண்டுரைக்கவெண்ணுவசமோவாமேனீர், எண்ணரியமாயவனேச்சிவாழும்-இறைவாநாராயணனேயெம்பிரானே,

(இ-ள்) இரண்டாயிரங்கண்களையுடைய ஆதிசேஷின்நெடுநாளாகவுன்கைங்கரியங்களைச்செய்துகொண்டு உன்பக்கலில் காத்துஉனதுதிவ்விபமங்களுக்கிசைக்கச் சௌந்தரியத்தைச்சேவித்திருந்தும், இன்னமும்மூன்றுஞ்சேவித்தவனல்லன், தனதிரண்டாயிரநாவுகளிலுமுனது அனந்தகலியாணகுணங்களை நெடுநாளாகப்படித்துத்துதித்தும் இன்னமும்முற்றும்ஓதினவனல்லன், இந்தப்பூலோகத்தில்சிலவாழ்நாளையுடையமக்கள் மாமிசட்சுகளால்உனது திருமேனியின்அழகைக்காண்கக்கூடாதபோதிலும் உன்னுடையகலியாணகுணங்களிவ்வளவென்று வேதமுதலியநூல்களால்கணக்குசொல்லவென்றுமுடியுமோமுடியாது, தேவர்களாலும் நினைப்பதற்குக்கூடாதமாயவனே திருக்காஞ்சியில்சயனித்தருளிய இறை

வனேநாராயணனேஎம்பிரானே-எ-று- (கூஅ)

பட்டமரந்துளிர்த்துமிகப்பூத்துக்காய்க்கப் - பாற்பசுக்கள் சுரந்தொழு கம்பலமீனத், துட்டவியாக்கிரமுமா னினமுமொன்றுத் - தோகைமயி ல்படநாகமுடனேபாட, வட்டமுலைக்கன்னியர்கண் மாலாய்நிற்க - வா னவருந்தானவரும்வணங்கிப்போற்ற; இட்டமுடனேவேணு நாதஞ்செ ய்தாய் - இறைவாநாராயணனேயெம்பிரானே. *

(இ-ள்) பிருந்தாவனத்தில் பட்டிருந்தமரங்களெல்லாம் தளிர்களைத்த ளிர்த்தும்குறியாக மலர்களைமலர்த்துகாய்களைக்காய்க்கவும், கறவைப்ப சுக்கள் கன்றுகளுண்ணுநிருக்கும்போதேசுரந்து பாலை ஒழுகச்செய்யவு ம், மலட்டுப்பசுக்களும்கன்றுகளைஈனவும், குரூரகிர்த்தியமுள்ள புலிக ளும்மான்கூட்டமும் ஒன்றுகக்கூடவும், கலாபத்தையுடைய மயில்கள் பெரும்படத்தையுடைய நாகங்களுடனேகூடிநடிக்கவும், வட்டமாகிய ஸ்தனங்களையுடைய கோபாலஸ்திரீஜனங்களும் தேவதாஸ்திரீஜனங்களும், மற்றசுத்தராங்கனைகளும்உனதுவடிவழகில் ஆசைப்பட்டு நிற்கவும், தேவர்களும்அசுரர்களும் பகைபாராட்டாமல்உறவாகிஉனது சீர்பாதங் களைவணங்கித்துதிக்கவும், அன்போடு வேணுநாதஞ்செய்தாய் யாவர்க ளுக்கும்நாயகனே நாராயணனேஎம்பிரானே-எ-று. (கூக)

ஆருமுனேநவமாகப்பாடலுண்டோ - ஆரணமாகம்மனேத்து நீயுரைத்தா ய், பேருமுனக்குண்டானபழையபேரே - பெருங்கதையுமியலிசையு ம்பழையவேயாம், காருதநிநீர்தனையே முகந்துசெப்பயிற் - கடலிலுநீ நீத்தமதாய்க்கலந்துற்றுப்போல், ஈரமுடன்மெய்படியார்தவமாப்பாடி ன் - இரங்கியதுட்கொள்கின்றயெம்பிரானே. *

(இ-ள்) வேதபுருஷனும் ஸ்ரீமத்பராங்குசமுனிவரும் ஸ்ரீவேதவியாச முனிவரும்மற்றும்முனிவர்களும் உன்னுடையஅநந்த கலியாணகுணங் களைப்பற்றிக் கூறியிருப்பனவற்றைஎவர்களும் பாடுவதேயல்லாமல் வே றேபுதிதாகத்தாங்கள் கண்டுபாடுதலுமுண்டோ இல்லையே வேதங்களை யும் ஸ்ரீபாஞ்சராத்திரத்தையும்மற்றும்வைதிகநூல்களையும் நீஉபதேசித்தி ருக்கின்றாய், உனதுகுணங்களைத்தெரிவிக்கும்திருநாமங்களும் உனக்கு முன்னேஉண்டாயிருக்கும் புராதனமாகிய திருநாமங்களே, பெருமை யாயெசரித்திரமும் இலக்கணத்தோடமைந்த இசையும் பழமையாயுள்

எனவே, இப்படியிருக்க, மேகங்கள் சமுத்திரஜலத்தைமொண்டு உலகில் பெய்தால் அந்தநீர்பிரவாகமாகிமறுபடியும் நெருங்கிச்சேரக்கடல் அங்கீகரிப்பதுபோல அன்போடு மெய்யடியார்கள் பதிதாகப்பாடினஞ்சிருவுளம் இரங்கி அச்செய்யுளை அங்கீகரிக்கின்றபடி எம்பிரானே-எ-று.

திருநாமமறவாவுன் தாசர்க்கெல்லாம் - சீர்பாதத்தூளிநாயடியேனுன்றன், அருளாலேயெம்பிரான்சதகமென்றே - அறைந்தகவி நூறதனிலொன்றுனும், பரிவாகக்கற்றவர்க்குங் கேட்டபேர்க்கும் - படிமிசையித்துன்பமறத்தின்பம்பாலித், திருபாதமெய்ஞ்ஞானம் விளங்கச்செய்வாய் - இறைவாநாராயணனேயெம்பிரானே.

(இ-ள்) உனதுதிருநாமங்களை மறவாமல்பஜிக்கின்ற அடியார்களெல்லோருக்கும் சீர்பாததூளியாகியநாய்போன்ற அடியேன் உனதுதிருதகடோட்சத்திருமேல் எம்பிரான் சதகமென்று சொன்ன நூறுசெய்யுள்களில்ஒருசெய்யுளாவதுஅற்புடனே படித்தவர்களுக்கும், படிக்கக்கேட்டபேர்களுக்கும், இந்தப்பூமியில் எல்லாத்துன்பங்களையும்ஒழித்துஇகத்துக்குவேண்டிய சுகங்களைத்தந்தருளி உனதுஉபயதிருவடிகளே யேதஞ்சமென்று பற்றுகின்றதத்துவஞானம் உண்டாகும்படிசெய்தருள்வாய் இறைவனேநாராயணனேஎம்பிரானே-எ-று. (ஈக)

எம்பிரான்சதகமூலமும்உரையும்

முற்றிற்று.

ஸ்ரீமத்-உபய,-ஆத்தான் திருக்ஷிணமாசாரியர் திருவடிகள்வாழ்க.